
பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

புதுமை : 03 | 10 நவம்பர் 2018 | விதி : 126

# அகௌரவம் வேண்டாமே!






**வண்ணத்துப் பூச்சியும் வக்கிர அரசியலும்**



**பீரங்கியின் முன் நின்ற மாமனிதன் யார்?**



**ஒரு கதவு தட்டப்படுகிறது**



**24000 வருடங்கள் காத்திருக்கும் அழிவு**

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




'2.0' வெளியீட்டுக்குத் தயாராகி விட்டது. இதையடுத்து இந்தியன் 2 படத்தை இயக்குகிறார் சங்கர்.

கமலுக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கிறார் என ஆரம்பத்தில் செய்திகள் வெளியாகின. தற்போது காஜல் அகர்வாலும் படத்தில் நடிக்கிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

தனுஷ் ஜோடியாக 'மாரி 2' படத்தில் நடித்து முடித்துள்ளார் சாய் பல்லவி.

அவர் நடித்த 'கரு' படம் சரியாகப் போகாததால் 'மாரி 2' இன் வெற்றிக்காகக் காத்திருக்கிறார்.





விஷால் ஜோடியாக ஒப்பந்தமாகியுள்ளார் தமன்னா. தமிழில் 3 படங்களில் நடிக்கும் அவர் தெலுங்கில் 4 படங்களில் நடிக்கிறார்.

இந்த வருடம் ஒரேயொரு படமே வெளியான போதும், அடுத்த வருடம் தமன்னா நடித்த 8 படங்கள் வெளியாகவுள்ளன.



'மூடர் கூடம்' நவீன் இயக்கத்தில் விஜய் அன்ரனி, ஷாலினி பண்டே நடிப்பில் உருவாகியிருக்கும் படத்தில் அருண் விஜய்க்கு காத்திரமான வேடமாம். படத்துக்குப் பெயர் 'அக்னிச் சிறகுகள்'.

அமலாபாலும் இயக்குநர் விஜயும் திருமண பந்தத்தில் இணைந்து கருத்து வேறுபாட்டால் பிரிந்தனர்.

இதையடுத்துத் தொடர்ந்து படங்களில் நடித்து வந்தார் அமலா பால். மறுதிருமணம் செய்யப் பெற்றோருக்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.



புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 10 நவம்பர் 2018 | விதி : 126

# கைவிடப்பட்ட ராஜிநாமாக்களும் கதியெனப்படும் பேச்சுக்களும்

தமது நாளாந்த சம்பளம் ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் எனக் கோரி மலையகம் முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ளன. ஆண்கள், பெண்கள் எனச் சகல மக்களும் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர். வர்த்தக நிலையங்கள் தமது கடைகளைப் பூட்டியும் மக்கள் ஆதரவை வழங்கியும் தொழிலாளர்களின் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

ஏற்கனவே பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவருமான வடிவேல் சுரேஷ் சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு மக்களுடன் வீதியில் இறங்கப் போவதாகத் தெரிவித்திருந்தார். கடந்த இரண்டு வருடங்களின் முன்புகூட 1,000 ரூபா சம்பள உணர்வு கிடைக்காவிடில் தீக்குளிக்கப் போவதாக நாடாளுமன்றத்துக்குப் பெற்றோல் கலனுடன் போன பெருமை இவருக்கு உண்டு.



தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டைமானும் சம்பள உயர்வு பெற முடியாவிடில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு வெளியேறப் போவதாகவும் பின் அமைச்சரானபோது அமைச்சுப் பதவியைத் துறக்கப் போவதாகவும் சொன்னார். மூன்று முறை பேச்சுகள் தோல்விடைந்த பின்பு இனிப் பேசுவதில்லை என்று கூறிய இவர்கள் நாலாவது முறையும் ஒரு முறை பேசிப் பார்த்தனர். முதலாளிமார் சம்மேளனம் இறங்கி வரவில்லை.

அடுத்த நாளே ஆறுமுகம் தொண்டைமான் எப்பிடியிருந்தாலும் சம்பள உயர்வைப் பேசித்தான் பெற முடியுமெனத் தெரிவித்தார். ராஜினாமா பற்றியோ, வீதியில் இறங்கிப் போராடுவது பற்றியோ இருவரும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

அதேவேளை ஆறுமுகம் தொண்டைமான் தொழிலாளர்களைத் தீபாவளி மட்டும் போர்ராட்டங்களை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டுள்ளார். அவரும் ஒரு தோட்ட முதலாளி என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் தோட்டத்தில்கூட சம்பளம் உயர்த்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நேற்று முதல் நீ யாரோ? நான் யாரோ?**
**இன்று முதல் நீ வேறோ? நான் வேறோ?**

# தமிழ் கைதிகள் விடுதலையில் நாமல் ராஜபக்ஷ களமிறக்கம்



தமிழ் கைதிகள் விடுதலையில் நாடாளுமன்ற உறுப்பினரும் மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த புத்திரனுமான நாமல் ராஜபக்ஷ தீவிரமாக ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

வட பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் படையணியின் அமைப்பாளர் ரஜீவன் அதன் அகில இலங்கை அமைப்பாளர் செந்திலுடன் தொடர்பு கொண்டு நாமலிடம் விடயத்தைக் கொண்டு சென்றதாகக் கூறப்படுகின்றது. நாமல் உடனடியாக மஹிந்த மூலம் மைத்திரியைத் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டாராம். அதனடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களிடம் உரிய நடவடிக்கை எடுக்கும்படி பணித்துள்ளாராம்.

ஏற்கனவே கைதிகள் தொடர் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்திய போதெல்லாம் விடுதலைக்கு ஏற்பாடு செய்யப்படுமெனத் தெரிவிக்கப்படுவதும் எல்லாமே ஏமாற்றமாக முடிவதும் வரலாறு. வழக்காடி சில கைதிகள் விடுவிக்கப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கள் முயற்சியால் கைதிகள் சிறிது சிறிதாக விடுவிக்கப்படுகின்றனர் என உரிமை கொண்டாடுவதுமுண்டு.

தற்சமயம் நீதியமைச்சிடமே இப்பிரச்சினை கொடுக்கப்பட்டதிலிருந்து இதற்கு என்ன நடக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். ஒவ்வொரு நெருக்கடி வரும்போது தமிழர்களுக்கு கானல் நீரைக் காட்டி தாகம் தீர்க்க முயல்வது வழமையான அனுபவமல்லவா?

**எல்லோரும் ஏறி ஓடின குதிரையில்**
**சங்கடத்தார் ஏறி சறுக்கி விழுந்தாராம்**

# ஜனநாயகத்தைக் காப்பதில் சம்பந்தன் தீவிரம்



தற்சமயம் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தனுக்கும் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்கவுக்கும் இடையில் முக்கிய பேச்சு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது அடுத்துவரும் நாடாளுமன்ற அமர்வுகளில் ஜனநாயகத்தைக் காப்பாற்றும்படி சம்பந்தன் அவர்கள் அனுரகுமார திஸநாயக்கவிடம் கோரினார் எனவும் அவர் அதற்கு சாதகமாகப் பதிலளித்தார் எனவும் செய்தி வெளிவந்துள்ளது.

இது தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாக நியாயபூர்வமான அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவு கோரி எந்தப் பேச்சும் நடத்தியிராத நிலையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான கோரிக்கை ஜே.வி.பியிடம் வைக்கப்பட்டுள்ளன. ஜே.வி.பி. அதிகாரப் பகிர்வு பிரிவினைக்கு வழிவிடும் என்ற கொள்கையைக் கொண்டவர்கள் என்பதும் வடக்கு, கிழக்கை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிப்பதில் முன்னின்று உழைத்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கு எதிர்க்கட்சிக் கொறடா பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வழங்கப்பட்டபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிலையில் சம்பந்தன், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதியா ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகப்பற்றற்ற தூதுவரா எனச் சிலர் கேள்வியெழுப்புகின்றனர். அதேவேளையில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், புதிய அமெரிக்கத் தூதுவர் ஆகியோர் இரா. சம்பந்தனைச் சந்தித்து உரையாடியதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.


# கடந்தவார சமூக வலைத்தளங்களில்






























புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## வெற்றுவேட்டு அரசியல் நிகழ்ச்சிகளை நிறுத்துங்கள்

"ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர மற்ற அனைத்தும் ஜனாதிபதியால் முடியும்" ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்தியபோது இவ்வாறு கூறினார் என்பதாக வரலாற்றில் கருத்து உண்டு. 2015 இல் பதவியேற்ற - ஆட்சிக்கு வந்த மைத்திரி - ரணில் அரசாங்கம் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்க நடவடிக்கை எடுத்தது என்ற போதும் நடைமுறையில் ஜனாதிபதியின் உச்ச அதிகாரத்தை வெளிப்படுத்திய சம்பவங்களாகவே அண்மைய நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

2015 நாடாளுமன்றத் தேர்தலில் புதிய அரசாங்கத்தை அமைக்கவே மக்கள் ஆணை வழங்கினர். விரும்பியோ - விரும்பாமலோ - அரசியல் சூழ்நிலையாலோ உருவாக்கப்பட்ட தேசிய அரசாங்கம் 5 ஆண்டுகள் ஆட்சி செய்யவே ஆணை வழங்கப்பட்டது. இந்த ஆணையை மீறும் வகையில் - மக்களின் ஆணை கிடைக்காத நிலையில், - பெரும்பான்மை நிரூபிக்கப்படாத நிலையில் புதிய அரசாங்கம் ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைத்துள்ளார்.

தனக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை ஒன்றுதிரட்டி - அரசியல் சூழ்ச்சிகளால் புதிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கிய ஜனாதிபதி, இப்போது புதிய அரசாங்கத்தை மக்களை ஏற்கச் செய்யவும் அல்லது புதிய அரசாங்கம் தோற்கடிக்கப்படும் பட்சத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தி மஹிந்த ராஜபக்ஷ தரப்பை வெற்றியடையச் செய்யும் வகையில் காய்களை நகர்த்தி வருகின்றார்.

மோசமான அரசியல் போக்கால் நாடு ஸ்திர நிலையை இழந்து பொருளாதார சரிவை சந்தித்துள்ளது. இந்நிலையில் தமது அரசியல் இருப்பைத் தக்க வைப்பதற்காகப் புதிதாகப் பதவியேற்ற மஹிந்த தலைமையிலான அரசாங்கம் எரிபொருளின் விலையையும் - வரி குறைப்பையும் செய்துள்ளது. இதன் விளைவையும், நாடாளுமன்றம் முற்கூட்டியே கலைக்கப்பட்டால் - கலைந்தால் அடுத்து நடக்கப் போகும் தேர்தலால் ஏற்படும் செலவுகளும் மக்களின் தலை மீதே சுமத்தப்படும். நாட்டின் மோசமான பொருளாதார சூழ்நிலையில் சுயநல அரசியலால் ஏற்படும் வீண் செலவீனங்களும் மக்களின் தலையிலேயே விலையேற்றம் - வரிச்சுமையாக கட்டப்படும்.

ஒரு பக்கத்தில் போரால் ஏற்பட்ட அழிவுகளில் இருந்து மீளத் துடித்துக் கொண்டிருக்கிறது ஒரு சமூகம். இன்னொரு பக்கத்தில் வாழ்வாதாரத் தேவையைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாத அடிப்படைச் சம்பளத்தைக் கொண்ட மலையக மக்கள் சம்பள உயர்வு கோரிப் போராடுகின்றனர். நாடு முழுவதும் பொருளாதாரப் பாதிப்புகள் மேலோங்கி நிற்கிறது. இவ்வாறான நிலையில் சுயநல அரசியலைக் களைந்து - வெற்றுவேட்டு அரசியல் நிகழ்ச்சிகளை தவிர்த்து நிலையான அரசாங்கம் அமையவும் - நேர்மையான முறையில் ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தவுமே நடவடிக்கைகள் தேவை.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 27

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா



எப்படித்தான் சிரித்தாலும் இனி என்ன நடக்கப் போகிறதோ என்ற ஏக்கம் மனதில் துயரை ஏற்படுத்தியது. இரண்டு பக்கமும் கயிறு கட்டப்பட்டு வரிசை வரிசையாக அந்தப் பாதை வழியே பயணிக்க வரையறுக்கப்பட்ட வசதி செய்யப்பட்டிருந்தது. பதினொரு மணியாகியும் நடைபவனி நிறைவடையவில்லை. சுமார் பதினைந்து கிலோ மீற்றருக்கும் மேலாக நடந்து ஒரு பெரிய பனங்கூடலை அடைந்தோம். தண்ணீர்த்தாகம் உயிரை வதைத்தது.

ஓரிடத்தில் எல்லோரும் அமர்ந்தோம். குழந்தைகளுக்கு தண்ணீர் அவசியமானது. சிலர் மண்ணைக்கிளறி வெறும் மண் தண்ணீரை அவசர அவசரமாகக் குடித்தனர். குழந்தையையும் அணைத்தபடி தண்ணீர் தேடத்தொடங்கினேன். காயப்பட்ட கணவர் மகனை வைத்துக்கொண்டு ஒரு பனைமரத்தின் நிழலில் போர்வை ஒன்றை விரித்து இளைப்பாறத் தொடங்கினார். இவ்வளவு தூரமும் தன் வலியை வேதனையை வெளிக்காட்டாது நடந்து வந்து சேர்ந்ததை நினைத்து கடவுளுக்கு நன்றி சொன்னேன்.

இராணுவத்தினர் முட்கம்பி வேலிக்கு வெளிப்புறமாக நின்று தண்ணீர்ப் போத்தலை எறிந்து கொண்டிருந்தார்கள். நிலமையை நினைக்க நினைக்க மனது கனத்தது. கண்ணீர்வழிந்தோடியது. விக்கிவிக்கி அழத்தொடங்கினேன். தண்ணீருக்காக பிள்ளையோடு நெரிபடும் சனக்கூட்டத்திற்குள் போய் மீள்வது கடினம். போகமுடியாத துயரம். அம்மா தண்ணீரோடு வருவா எனக் காத்திருக்கும் என் மகன். பிள்ளைக்குத் தண்ணீர்த் தாகத்தால் ஏதாவது உடம்புக்கு ஆகிடுமோ என்ற பயம். காயப்பட்ட மனுசன் வாய்திறந்து ஒன்றுமே கேட்காத பரிதாப பார்வை . எல்லாமே மனதை ரணப்படுத்தியது.

என் இயலாமைகளை எண்ணி ஓரிடத்தில் இருந்து அழுது தீர்த்தேன். அழுதால் மனது பாரம் குறையுமா? சுட்டெரித்த மத்தியான வெயிலால் என் மண்டை பிளந்துவிடும் போலிருந்தது. எழுந்து தண்ணீர் கொடுக்குமிடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னை ஓரிடத்தில் இருக்கச்சொல்லி தண்ணீர் பெறச் சென்ற தோழி முகவாட்டத்தோடு வெறுங்கையுடன் வந்தாள். தண்ணீர்ப்போத்தல்கள் முடிந்து வாகனத்தில் (பவுசர்) தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்தனர். மக்கள் பாத்திரங்களில் ஏந்திச் சென்றனர்.

சற்றுத்தூரத்தில் நீர்கொடுக்கும் வாகனத்தையே பார்த்துக்கொண்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவன் ஒரு பானை நிறையத் தண்ணீரைக் கொண்டுவந்து முட்கம்பி வேலிக்கு அப்பாலிருந்து சைகை காட்டி அழைத்தான். மனதில் திகில் அப்பிக்கொள்ள குழந்தையை இறுக அணைத்தபடி சென்றேன். 'இந்தாங்கோ தண்ணீ" எனக்கூறி அந்தத் தண்ணீர்ப் பானையை என்னிடம் நீட்டினான். எனக்கா அல்லது வேறு யாருக்குமோ என நினைத்து திரும்பிப்பார்த்தேன். 'தங்கச்சி பிடிங்க" என என்னிடம் அந்தத் தண்ணீர்ப் பானையைத் தந்தான்.

இராணுவத்தில் இருப்பவர்களில் சிலரிடமும் மனிதாபிமானம் இருக்கிறது என்பதைக் கண்டுகொள்ள இச்சம்பவம் உணர்த்தியது. பிள்ளையையும் தண்ணீர்ப் பானையையும் தூக்க சிரமமாக இருந்தது. அந்தச் சிரமத்தைக் கருத்தில் கொள்ளாமல் சிலர் ஓடி வந்து தமது சிறிய பாத்திரங்களால் தண்ணீரை அள்ளிச்சென்றனர். பழக்கவழக்கம் செத்துப்போன மனிதக்கூட்டமாக நடந்து கொண்டனர். இதைக்கண்ட தோழி காகம் கலைப்பது போல அவர்களைத் துரத்த வேண்டியிருந்தது.

அவளால் சமாளிக்க முடியாது போகவே குழந்தையை அவளிடம் கொடுத்துவிட்டு தலையில் மூடியிருந்த துணியால் பானையின் வாயை இறுகக் கட்டி அரைவாசி நீரைக் காப்பாற்றிய நிம்மதியோடு கணவரும் பிள்ளையுமிருந்த இடத்தை அடைந்தோம். அங்கு ஒரு போத்தலில் மண்டித் தண்ணீரை தெளியவிட்டு இரண்டுஜீவன்களும் எங்கள் வருகைக்காக காத்திருந்தன. நல்ல நீரைக்கொண்டுபோய் கொடுத்து நானும் குடித்தேன். உயிர் உடம்பில் இருப்பதை உள்ளே போன நீர் உறுதிசெய்தது. விழுந்து உறங்கத்தொடங்கினேன். கடைசிநாள் தயாரித்த சீனிபோட்டுப்பொரித்த ரொட்டியை மகன் சாப்பிடுவது மயங்கும் கண்களுக்குள் நிறைந்திருந்தது.

மதியம் ஒரு மணிக்கு உறங்கத் தொடங்கி இரவு எட்டு மணிக்கே உறக்கம் கலைந்தது. கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. குளித்தால் நல்லது போல் தோன்றியது. குடிக்கவே தண்ணீரில்லை. குளிப்பது எப்படி? ஏதோ கொண்டாட்டத்திற்கு கட்டியது போல மின்குமிழ்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. ஒரு வகையில் அது மனதுக்கு நல்லதாகவே பட்டது.

(சாட்சியம் நீளும்)

# மண் குதிரையும் தமிழ் அரசியலும்

■ யோகநாராயணன்

அண்மையில் சில மாதங்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வுக்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையே நிலவி வந்த பனிப்போர் இடையிடையே வெளிப்பட்டபோதும், தற்சமயம் அது முற்றி வெடித்து அடுத்த கட்டத்தை எட்டி ஒரு குழப்பமான நிலையை ஏற்படுத்தி விட்டது. இந்த நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவரின் பதவியிலிருந்து நீக்கப்பட்டதுடன் அமைச்சரவையும் கலைக்கப்பட்டு விட்டது. உடனடியாக மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டதுடன் புதிய அமைச்சர்களும் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இச்சம்பவங்கள் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பலவிதமான சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளன. பல வெளிநாட்டுத் தூ துவர்களும் இரு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சுகளை நடத்தியபோதும், தாங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை எனச் சொல்லிக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் தங்கள் நலன்கள் அடிப்படையில் காய்களை நகர்த்துவார்கள் எனபதில் சந்தேகப்பட வேண்டியதில்லை.

எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களில் இரு தரப்பினருக்கும் தங்கள் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய தேவை எழுகின்றது. எவருக்குப் பெரும்பான்மை உள்ளது என அறுதியிட்டு எவருமே முடிவெடுக்க முடியாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேவை முக்கியத்துவம் பெற்றுள்ளது. அவ்வகையில் இரு தரப்பினருமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஆதரவு கோரிப் பேச்சுகளை நடத்தினர்.

அப்பேச்சுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்குவ தற்காக உத்தேச அரசியலமைப்பை நிறைவேற்றுவது, ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் பேரவை யில் 2015 ஆம் ஆண்டு நிறைவேற் றப்பட்ட தீர்மானம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டன. இக்கோரிக்கைகளுக்கு அவர்கள் பதில் வழங்கவில்லையா அல்லது வழங்கப்பட்ட பதில்கள் வெளியிடப்படவில்லையா என்பது வெளியே வரவில்லை. அதேவேளையில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக தீவிரமான முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.


தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்றக் குழு இரு தடவைகள் கூடி எந்த முடிவும் எடுக்காத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் மஹிந்த பக்கம் தாவியதை மூன்றாவது சுற்றுக்கூடி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கடந்த 20 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியிலிருந்து நீக்கப்பட்டது சட்டவிரோதம் எனவும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லாத ஒருவர் பிரதமராக நியமிக்கப்படுவது ஜனநாயக விரோதச் செயல் எனவும் நாடாளுமன்றத்தை ஒத்தி வைத்ததும் அடுத்த அமர்வுகளைத் தாமதிப்பதன் பணத்தாலும் பதவிகளாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் முறையற்ற நடவடிக்கை எனவும் தெரிவிக்கப்பட்டது. அதேவேளையில் இப்பிரச்சினையில் நடுநிலை வகிப்பது என்பது மீண்டும் அராஜகம் ஆட்சிக்கு வர வழிகோலி விடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் பணத்தாலும், பதவியாலும் விலைக்கு வாங்கப்படுதலுக்கு வியாழேந்திரன் பலியாகி விட்டாரெனவும் அவர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளையில் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்கட்சியாக இழுத்துக் கொண்டு அரசாங்கத்துக்கு ஆதர வளிப்பதில் என்ன தவறு எனக் கேள்வி எழுப்பியதுடன் அவர் உரிமைப் போராட்டத்தையும் அபிவிருத்தியையும் சமாந்தரமான முறையில் முன்னெடுக்கப் போவதாகத் தெரிவித்தார். இவை அப்படியொன்றும் புதிய வார்த்தைகளல்ல. இதே வார்த்தைகள் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 2 கோடி ரூபா வீதம் ஒவ்வொருவரும் பெற்றனர் எனக் குற்றம் சாட்டிய போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் சொல்லப்பட்டவைதான்.

இன்னொருபுறம் சில மாகாண சபை உறுப்பினர்களும், பிரதேச சபைத் தலைவர்களும் இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடுநிலை வகிக்க வேண்டுமெனப் பகிரங்கமாகவே கோரியுள்ளனர். இலங்கையின் மொத்த ஜனநாயகத்தையும் காப்பாற்ற இந்த மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்களின் ஜனநாயக உரிமை காலில் போட்டு மிதிக்கப்படும் என்பதில் எவ்வித சந்தேகத்துக்கு இடமில்லை.

எப்படியிருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலுக்கு முழுமையான ஆதரவை



வழங்கும் என்பது உறுதியாகி விட்டது. ஜனநாயகத்தைக் காப்பாற்ற ரணிலை ஆதரிக்கப் போவதாகக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும் சரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சியிலும் சரி இரண்டும் இணைந்த ஆட்சியிலும் சரி தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட்டன்வா? படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் மக்களின் சொந்தக் காணிகள் முற்றாக விடுவிக்கப்பட்டு விட்டனவா? தமிழ் பிரதேசங்களின் முக்கிய மீன்பிடி மையங்கள், விளைநிலங்கள் விடுவிக்கப்பட்டு விட்டனவா? காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தீர்க்கப்பட்டு விட்டதா? அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டு விட்டார்களா? இவை தொடர்பாக மக்கள் தொடர்ந்து நடத்தி வரும் போராட்டங்களுக்குச் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா?

புதிய அரசியலமைப்பு மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனக் கூறப்பட்டது. மூன்று வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இழுத்துப் பறிப்பதை விட ஆக்கபூர்வமான பெறுபேறுகள் வெளிப்படுத்தப்பட்டனவா? 2015 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா?

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு - செலவுத் திட்டங்கள் ரணில் விக்கிரமசிங்க வுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அனைத்திலும் நல்லாட்சி அரசுக்கு நிபந்தனை யற்ற ஆதரவை வழங்கியது. எமது பிரச்சினைகள் தொடர்பாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பேரம்பேச வாய்ப்பிருந்தும் மஹிந்த தரப்பினர் அதைப் பயன்படுத்தி விடுவார்கள் எனக் கூறப்பட்டு எக்கோரிக்கையும் வைக்கப்படாமலே ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

அண்மையில் எரிபொருள் விலையேற்றம், பாவனைப் பொருட்கள் விலையேற்றமென நாட்டு மக்கள் மேல் சுமத்தப்பட்ட அதிக வரிகளால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவருமே மூச்சுத் திணற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மேலும் மேலும் தாங்க முடியாத நெருக்கடிக்குள் தள்ளப்பட்டனர். அதற்கெதிராகக்கூடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்ப்புக் குரல் எழுப்பவில்லை.

தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட அவற்றை வழங்கத் தயாரற்ற இலங்கையில் ஒட்டுமொத்த ஜனநாயகத்தைக் காப்பாற்ற மற்ற அனைத்தையும் த.தே.கூட்டமைப்பு புறந்தள்ளுகிறது என்றால் எமக்கு, ஏன் அந்த ஜனநாயகம் என மக்கள் கேட்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

உண்மையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஐக்கிய தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்படும் ஆதரவு ஜனநாயகத்தின் பேரிலோ தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளின் அடிப்படையிலானதல்ல. மாறாக இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்று வரை தமிழ் தலைமைகளுக்கும் ஐ.தே. கட்சிக்கும் இடையே நிலவி வரும் ஆத்மார்த்த உறவாகும். அது மேற்குலக நாடுகளாலும் இந்தியாவாலும் இறுக்கமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இங்கு இனப் பிரச்சினை என்பது அவர்களின் நலன்களுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு பகடைக்காயே.


எப்படியிருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தால் மஹிந்தவின் ஆட்சி தோற்கடிக்கப்படும் எனவும் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தலை நடத்துவார் எனவும் அதில் மஹிந்த அமோகப் பெரும்பான் மையுடன் வெற்றி பெறுவார் எனவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். அதன் பின்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்யப் போகிறது என்பதே இப்போது தமிழ் மக்களிடம் எழும் கேள்வி.

தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வகையில் அடுத்த கட்டத்தை இப்போதே தமிழ் மக்கள் முன் வைப்பதே ஆரோக்கியமான அரசியலாகும். மீண்டும் மீண்டும் ஆற்றில் மண் குதிரைகளில்தான் இறங்கப் போகிறார்களா அல்லது புதிய பாதையை அதாவது மக்களை, மக்களை மட்டுமே நம்ப வேண்டும் என்ற பாதையைத் தெரிவு செய்யப் போகிறார்களா என்பதைத் தெளிவுபடுத்த வேண் டும். ●

# ஒரு கதவு தட்டப்படுகிறது

# காந்தி பற்றிப் பேசுவோம்!

"தன் பள்ளி நண்பருடன் சேர்ந்து புலால் உண்டது, பாலியல் விடுதிக்குச் சென்று ஏதும் செய்யாமல் பயந்துபோய் ஓடிவந்தது, அந்தச் சிறு வயதிலேயே மனைவியின் மீது அதீத அதிகாரமும் சந்தேகமும் கொண்டிருந்தது என எல்லாவற்றையும் குற்றவுணர்ச்சியுடன் 'சத்திய சோதனை'யில் மனம் திறந்துள்ளார் காந்தி. அவர் திறந்து வைத்ததை முன்வைத்தே அவரை நாம் இன்று கடுமையாக விமர்சித்துக் கொண்டிருக்கிறோம் என்பது வேறு கதை. மானசீகமாகத்தன்னும் மக்களுக்குத் துரோகமிழைக்கக் கூடாதென்ற எண்ணம் காந்தியிடம் இந்திருக்க வேண்டும். அதனால்தான் அவர் "சத்தியசோதனை" என்ற நூலை எழுதிச் சென்றுள்ளார். தன்னைப் பற்றி யாராவது சரியாக, துல்லியமாகத் தீர்மானிக்க வேண்டும் என்றதற்காகவே அவர் அதில் மனம் திறந்திருக்கிறார் எனலாம்."



"மோகன்... மோகன்... வெளியே வா!" என்று வீட்டுப் பணியாளர் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு, தன் மனைவியாகிய சிறுமியை விட்டுவிட்டு எழுந்தார் மோகன்தாஸ் காந்தி. கதவைத் திறந்து வெளியே வந்தபோது பணியாளர் காந்தியிடம் இப்படிச் சொன்னார்: "அப்பாவின் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது, உடனே வா!"

காந்தியின் இறுதி நாள் வரை அவரால் மறக்க முடியாத அந்தச் சத்தம் அவர் வீட்டுப் பணியாளர் தட்டிய அந்தக் கதவுச் சத்தம். இளைஞரா அல்லது சிறுவரா என்று சொல்லிவிட முடியாத 16 வயதுடைய காந்திக்குத் திருமணம் ஆகி மூன்று ஆண்டுகளைக் கடந்திருந்தது. நடந்ததைத் திருமணம் என்று சொல்ல முடியாது என்றுதான் பின்னாளில் காந்தி கருதினார். அவர் சமூக வழக்கப்படி அவருக்குத் திருமணம் நடைபெற்றது.

திருமணமான இருவருக்கும் தாங்கள் யாரைத் திருமணம் செய்துகொள்கிறோம் என்று தெரிந்திராத பருவம். திருமணம் என்றால் என்னவென்றே புரிந்திராத பருவத்தில் நடந்த ஒரு சடங்குக் கொடுமையாகவே தனக்கும் கஸ்தூரிபாவுக்கும் நடந்த குழந்தைத் திருமணத்தைப் பின்னாளில் காந்தி கருதினார். என்றாலும் திருமணம் நடந்த வயதில் அவருக்கு அதுவொரு விளையாட்டுச் சம்பவமாகவும், போகப் போக காமத் துய்ப்புக்கான பந்தமாகவும் அவருக்குப் புரிபடத் தொடங்கியது.

அந்நாட்களில் காந்திக்குப் பள்ளியில் இருக்கும் போதெல்லாம் தன் மனைவியான கஸ்தூரிபாவின் நினைவுதான் வருவதாகக் காந்தி சொல்லி இருக்கிறார். கஸ்தூரிபாவுக்கும் காந்திக்கும் சம வயதுதான். பார்க்கப்போனால் இன்றைய சட்டப்படி அன்று அவர்கள் இருவரும் குழந்தைகள்தான். பள்ளி முடிந்ததும் வீட்டுக்கு முதல் ஆளாக ஓடும் காந்தி, உடல்நலம் குன்றி, படுத்த படுக்கையாக இருக்கும் தன் தந்தை கரம்சந்துக்குப் பணிவிடை செய்வதுதான் முதல் வேலையாக இருக்கும். ஆனாலும், பணிவிடையில் சிறிது ஓய்வு கிடைத்தால் போதும், உடனே தன் மனைவி கஸ்தூர்பாவின் அறைக்கு ஓடிவிடுவார்.

அன்று தன்னைக் கூட்டிச் செல்ல வந்த வீட்டுப் பணியாளருடன் காந்தி சென்று சேர்வதற்குள் அவர் தந்தை கரம்சந்த் உயிரை விட்டிருந்தார். அவருடைய இறுதிக் கணங்களில் அவருடைய தம்பி துளஸிதாஸ் தான் உடன் இருந்தார். அதுவரை தந்தைக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்த காந்தியை, "நீ போய் சற்று ஓய்வெடுத்துக் கொள்" என்று அனுப்பியது காந்தியின் சித்தப்பாதான். கடைசி நேரத்தில் அப்பாவின் பக்கத்திலிருக்கும் பாக்கியம் தனக்கு இல்லாமல் போய்விட்டதே என்று துயரத்தில் குமைந்தார் காந்தி. இவையெல்லாம் காந்தியின் வாழ்க்கையை ஆராய்ச்சி செய்து எழுதிய யாரோ ஒரு வரலாற்றாசிரியர் புதிதாகக் கண்டறிந்து சொன்ன விஷயங்கள் அல்ல. காந்தியே தன் வாழ்க்கையைத் திறந்த புத்தகமாக்கிச் சொன்னவை.

கரம்சந்த் காந்தியின் மரண தினம் காந்தியின் வாழ்க்கையில் மட்டுமல்ல, இந்திய வரலாற்றிலும் மிகுந்த தாக்கத்தைச் செலுத்திய தினம். ஏனென்றால், பாலுறவு நாட்டத்தின் மீது காந்திக்கு மிகுந்த வெறுப்பும் அதனால் குற்றவுணர்வும் ஏற்பட்ட தினம். தன்னுடைய பாலுணர்வின் மீது தீராத போராட்டத்தை அவர் இறுதிவரை நடத்துவதற்கு வித்திட்ட தினம். தன் மீது பரிபூரணக் கட்டுப்பாடு இல்லாத ஒருவர் ஒரு தேசத்தை வழிநடத்த முடியாது என்று கருதிய காந்தி, தன்னுடைய பாலுணர்வையும் தன்னுடைய கட்டுப்பாட்டுக்கான சோதனைக் களங்களில் ஒன்றாகப் பிற்காலத்தில் மாற்றினார்.

தந்தையின் மரணத்தோடு மட்டும் அந்தக் கதை முடிந்துவிடவில்லை. அந்தச் சமயத்தில் கஸ்தூரிபா கருவுற்றிருந்தார். அந்தக் குழந்தை பிறந்து ஒருசில நாட்களில் உயிர்விட்டுவிட்டது. கஸ்தூர்பா கருவுற்றிருந்தபோது அவருடன் தான் உடலுறவு கொண்டதால்தான் அந்தக் குழந்தைக்கு இந்நிலை ஏற்பட்டுவிட்டது என்று இரட்டைக் குற்றவுணர்ச்சியை அவர் சுமக்க ஆரம்பித்தார். காந்தியின் மூத்த மகன் ஹரிலால் தன் தந்தையின் பாதையிலிருந்து விலகி நடக்க ஆரம்பித்தபோதுகூட காந்தி, 'கட்டுக்கடங்காத உடல் இச்சைகளின் பிடியில் தான் ஆட்பட்டிருந்தபோது பிறந்த குழந்தையாதலால் ஹரிலாலுக்கு இக்கதி ஏற்பட்டுவிட்டது' என்றும் நம்பினார். பாலுணர்வுக்கு எதிரான அவருடைய யுத்தம் இப்படிப் பல காரணிகளால் படிப்படியாகக் கட்டப்பட்டது.

காந்தியின் பார்வைகளை எந்தத் தளத்திலிருந்து அணுகுவது, அவற்றில் எவையெல்லாம் சரி, தவறு என்பன விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கிறது; இன்னும் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், அவருடைய பார்வைகள் ஒவ்வொன்றும் வரலாற்றோடு ஊடாடின. குழந்தை மணம், ஆடம்பரத் திருமணங்கள், குழந்தை விதவையர் போன்ற முறைகளுக்கு எதிராக காந்தி பேசியதெல்லாம் சட்டங்களிலும் எதிரொலித்தது. அந்தச் சட்டங்களில் காந்தியின் பங்கு என்னவாக இருப்பினும் தன் வாழ்க்கையின் சம்பவங்களை மக்கள் முன் திறந்துவைத்து, தன்னை ஒரு தவறான உதாரணமாக அவரே காட்டிக்கொண்டு, மக்கள் மனதில் அந்தக் கொடுமைகளுக்கு எதிரான உணர்வுகளை விதைத்ததில் காந்திக்குப் பெரும் பங்கு இருக்கிறது.


தனது சத்திய சோதனையில் 'குழந்தை மணம்' என்ற மூன்றாவது அத்தியாயத்தை ஒரு மன்னிப்புக் கோரலாகவும், அன்றைய திருமண முறைகளின் (இன்றைய திருமண முறைகளுக்கும் பொருந்தும்) மீதான விமர்சனமாகவும் காந்தி எழுதுகிறார்.

"இந்த அத்தியாயத்தை நான் எழுத நேர்ந்திருக்கக் கூடாது என்றே விரும்புவேன். இந்த வரலாற்றைக் கூறி முடிப்பதற்குள் கசப்பானவை பலவற்றை நான் விழுங்கித்தான் ஆக வேண்டும் என்பதை அறிவேன். நான் சத்தியத்தை வழிபடுபவனாக இருப்பதென்றால், வேறு விதமாக நடந்துகொள்வதற்கில்லை. எனது பதின்மூன்றாவது வயதில் எனக்கு மணமாயிற்று என்பதைக் கூறியாக வேண்டியது, வேதனையோடு கூடிய என் கடமையாகிறது. என்னைச் சுற்றிலும் என் பராமரிப்பில் இருக்கும் அதே வயதுடைய சிறுவர்களைப் பார்த்துவிட்டு, என் விவாகத்தையும் எண்ணும்போது என்னைப் பற்றி நானே பரிதாபப்பட்டுக்கொள்ளத் தோன்றுகிறது என் கதிக்கு ஆளாகிவிடாமல் தப்பிவிட்ட அவர்களை ஆசீர்வதிக்கவும் தோன்றுகிறது. அப்படிப்பட்ட அக்கிரமமான குழந்தைக் கல்யாணம் சரி என்று கூறுவதற்கு ஒழுக்கரீதியான வாதம் ஏதுவும் இருப்பதாக நான் காணவில்லை."

தந்தையின் மரணத்தின்போது தன்னுடைய நடத்தை குறித்துக் குற்றவுணர்வுகொள்ளும் அதே காந்தி, தனக்கு நடத்தப்பட்ட திருமணத்துக்காகத் தந்தையை விமர்சிக்கவும் தவறவில்லை: "நான் குழந்தையாக இருந்தபோதே எனக்கு விவாகம் செய்துவிட்டதற்காக என்றாவது ஒருநாள் நான் என் தந்தையைக் கடுமையாகக் குறைகூறுவேன் என்று அப்பொழுது நான் கனவிலும் எண்ணவில்லை."

"அகிம்சா தருமத்தை, அதன் எல்லா அம்சங்களிலும் நான் உணர்ந்த பின்னரே, (மனைவியின் மீதான) சந்தேகத்தின் புரை என்னை விட்டு ஒழிந்தது. அப்பொழுதுதான் பிரம்மச்சரியத்தின் மகிமையை உணர்ந்தேன். அப்பொழுதுதான் மனைவி, கணவனின் வாழ்க்கைத் துணைவியும், தோழியுமேயன்றி அவனுக்கு அவள் அடிமையல்ல என்பதையும், அவனுடைய சுகதுக்கங்களில் எல்லாம் அவனோடு சமபங்கு வகிப்பவள் என்பதையும், கணவனைப் போலத் தன்வழியில் நடந்துகொள்ள அவளுக்குச் சுதந்திரம் உண்டு என்பதையும் தெரிந்துகொண்டேன்" என்ற உணர்வு பெற்று, பின்னாளில் எழுதும் காந்தியுடன் 13 வயது மணமகன் காந்தியை நாம் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்! ●

# 24,000 வருடங்கள்



# காத்திருக்கும் அழிவு

அமெரிக்கா 2,200 தொன் அணுசக்திக் கழிவுகளை ஒவ்வொரு ஆண்டும் அணு உலைகள் மூலமாக வெளியேற்றிக் கொண்டிருக்கிறது. இவற்றை மறுசுழற்சி செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், எந்த முயற்சியும் கைகொடுக்கவில்லை. 'அணுக் கழிவுகளைப் பாதுகாப்பாக வைப்போம்" என அந்நாட்டு அரசாங்கம் சில ஆண்டுகளுக்கு முன்பு உறுதியளித்ததது. ஆனால், அணுக்கழிவுகளை சேமிக்கப் பாதுகாப்பான இடம் இன்னும் அரசாங்கத்தால் ஒதுக்கப் படவில்லை. இப்போது பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அணுக்கழிவு நாடெங்கிலும் கதிரியக்கத்தை உமிழ்ந்து வருகிறது. அவற்றில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இடங்களில் சான் ஓனோஃபெர் அணு மின் நிலையம் ஒன்று.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள நகரம், சான் க்ளெமென்ட். அந்நகரத்தின் அற்புதமான கடற்கரையில் செயற்படாத சான் ஓனோஃபெர் அணுமின் நிலையம் அமைந்துள்ளது. மொத்தமாக மூன்று உலைகளைக் கொண்ட அம்மின் நிலையம் 2013 ஆம் ஆண்டு கைவிடப்பட்டது. ஆனால் இவற்றில் சேமித்து வைக்கப்பட்டுள்ள அணுக் கழிவுகளை இதுவரை என்ன செய்வதென்றே தெரியாமல் வைத்திருக்கிறார்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக இன்னும் அணுக்கழிவுகள் உறங்கிக் கொண்டேதான் இருக்கின்றன. இதனால் இப்போது கிளம்பியிருக்கும் பிரச்சினைதான் கொஞ்சம் பீதியைக் கிளப்பும் ரகமாக இருக்கிறது. கைவிடப்பட்டுள்ள அணு உலையில் சேமித்து வைக்கப்பட்டுள்ள அணு உலைக்கழிவுகள் அங்கு வேலை செய்யும் பணியாளர்களைப் பாதிக்க ஆரம்பித்திருக்கிறது.

இப்போது இங்கே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு விடயம், இது அமைந்துள்ள இடம் பசிபிக் பெருங்கடலின் ஓரத்தில் அமைந்துள்ளது. இதன் 75 மைல் தொலைவில் லொஸ் ஏஞ்செல்ஸ் நகரமும், சான் கோ நகரமும் அமைந்துள்ளன. அணு உலை பகுதியில் 85 லட்சம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இருப்பினும் அம்மக்கள் வழக்கம்போல தங்கள் பணிகளைத் தொடர்ந்து வருகிறார்கள். இவ்வளவுக்கும் மையமாகத்தான் சான் ஓனோஃபெர் அணுமின் நிலையம் அமைந்துள்ளது.


இந்த அணுஉலை இயங்கிய போது 1.40 மில்லியன் வீடுகளுக்கு மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. இப்போது அணு உலைகள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் அணுக்கழிவுகள் ஓய்வை முடித்துக் கொண்டு தனது பணியைத் தொடங்கக் காத்திருக்கின்றன. இங்கேதான் பல தொன் நிறை கொண்ட அணுக் கழிவுகள் உறங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றைக் குளிர்விப்பது நின்றுவிட்டால் அது விழித்துக் கொள்ளும். அப்போது நேரும் துயரங்கள் கொடூரமானதாக இருக்கும்.

இந்த அணுக்கழிவுகளில் உள்ள சீசியம் மற்றும் ஸ்ட்ரான்டியம் செயலிழக்க 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகும். ஆனால் புளுட்டோனியம் செயலிழக்க 24 ஆயிரம் ஆண்டுகள் ஆகும். அந்த 24 ஆயிரம் ஆண்டுகள் இந்த ஆலையை எந்த ஒரு பேரிடரும் தாக்காமல் இருக்க வேண்டும். அப்போதுதான் அணுக்கழிவுகள் முழுமையாகச் செயலிழக்கும்.

ஒரு அணு உலை ஆரம்பிக்கும்போது, குறைந்த செலவில் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லி ஆரம்பிக்கப்படுகிறது. ஆனால், அதில் மீதமாகும் அணுக்கழிவுகளை அகற்ற 24 ஆயிரம் வருடங்கள் ஆகும் செலவு கணக்கில் சேர்க்கப்படுவது இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. அதைக் கணக்கிட்டால் அணு உலை மின்சாரமானது, மாற்று சக்தி மின்சாரத்தை விட பத்து மடங்கு செலவையே தரும்.

அணு உலைக் கழிவுகள் இதுவரை குளிர்ந்த தண்ணீரில் வைக்கப்பட்டு வருகிறது. கடந்த சில வருடங்களுக்கு முன்பு, அணு உலை நிர்வாகம், நேவாடாவில் உள்ள யுக்கா மலைப்பகுதிகளில் அணுக்கழிவுகளைச் சேமிக்கலாம் என்ற யோசனையை அமெரிக்க அரசின் முன் வைத்தது. ஆனால், இதனை நேவாடா மாநிலம் ஏற்க மறுத்தது. இதனையடுத்து அணுக்கழிவுகள் அங்கேயே வைக்கப்பட்டுள்ளன. இது மலைப்பகுதிகளில் வைக்கப்படுவதை விடவும், இப்போதுள்ள கடற்கரைப் பகுதி மிகவும் ஆபத்தானது. மிகப்பெரிய தவறும் கூட. ●



# வாரப்பலன்

## மேடம்

உத்தியோகத்தில் சிலருக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்கும். அலுவலகத்திலேயே சம்பள உயர்வுடன் பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். சொந்தத் தொழிலில், புதிய வாடிக்கையாளர் வருகையால் வருவாய் அதிகரித்தாலும், வேலையை ஓய்வின்றி செய்ய நேரிடும்.

## ரிஷபம்

தீவிர முயற்சியால் எதிர்பாராத காரியம் ஒன்று திடீரென நடைபெற்று மகிழ்வளிக்கும். உத்தியோகஸ்தர்கள், சக ஊழியர்களுடன் சுமுகமாக நடந்து கொள்ள வேண்டும். கலைஞர்கள் தீவிர முயற்சியின் மூலம், புதிய வாய்ப்புகளை பெறுவர். வருமானம் எதிர்பார்க்கும் அளவு கிடைக்காது.

## மிதுனம்

வரவுகள் வரும் முன்னரே செலவுகள் வாசலில் நிற்கும். இருந்த இடத்தில் காரியம் சாதிப்பீர்கள். தள்ளி வைத்த வேலையை உடனே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். கூடுதல் கவனம் செலுத்துங்கள். கூட்டுத்தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும்.

## கடகம்

உற்சாகமும், முயற்சியும் இருந்தாலும் ஒருசில காரியங்களில் தான் வெற்றி காண இயலும். வர வேண்டிய பணவரவு தள்ளிப் போகும். செய்யும் கூட்டுத் தொழில் வியாபாரத்தில் சுமாரான வியாபாரம் நடைபெற்றாலும், வழக்கமான லாபம் குறையாது.

## சிம்மம்

இந்த வாரம் செய்யும் செயல்களில் சிந்தை கலங்காமல், சிறப்பான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புதிய தொழில் தொடங்குவது பற்றி கலந்து ஆலோசிப்பீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் எதிர்பார்க்கும் லாபம் தர சிறிது காலம் பொறுமையாய் இருக்க வேண்டும்.

## கன்னி

பண வரவுகள் சிறிது தாமதமாகவே வந்து சேரலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்காக, உங்களுக்கு வர வேண்டிய ஆதாய வரவை விட்டுக் கொடுக்க நேரிடும். வியாபாரம் நன்றாக நடைபெற்றாலும், வருமானம் தாமதமாகவே கைக்கு வந்து சேரும்.

## துலாம்

சிந்தித்து செயல்பட்டாலும் சிறு சிறு தடங்கல்களைத் தவிர்க்க இயலாது. வார்த்தையில் இனிமை தேவை. சிலருக்கு உயர் பதவியும், அதிகாரியின் அரவணைப்பும் இருக்கும். சிலருக்கு கடன் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் சுமாராகவே காணப்படும்.

## விருச்சிகம்

இந்த வாரம் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். உத்தியோகஸ்தர்கள் பொறுப்புகளில் அதிக கவனம் செலுத்துவதோடு, மிகுந்த பொறுமையோடும் செயல்பட வேண்டியிருக்கும். சொந்தத் தொழிலில் புதிய நபர்களின் வருகை இருக்கும்.

## தனுசு

காரியங்கள் பலவற்றை திட்டமிட்டு செய்தாலும், அனைத்திலும் வெற்றியை எதிர்பார்க்க முடியாது. உயரதிகாரிகளின் கோபப் பார்வைக்கு இலக்காக நேரிடும். சொந்தத் தொழிலில் பணிகள் பல வந்து சேரும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் வரும்.

## மகரம்

உத்தியோகத்தில் உள்ளவர்கள் வேலைகளில் கவனமாக ஈடுபடுவது அவசியம். மறதியால் சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். தொழிலில் புதிய நபரை உள் வாங்குவீர். பொருளாதார முன்னேற்றமும், தொழிலில் அபிவிருத்தியும் ஏற்படும்.

## கும்பம்

சிலருக்கு பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கும். அலுவலகத்தில் வர வேண்டிய தொகை கிடைக்கும். சொந்தத் தொழிலில் முன்னேற்றமான போக்கு காணப்படும். பணவரவுகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும் யோகமான காலம்.

## மீனம்

உத்தியோகஸ்தர்கள் தங்கள் பொறுப்புகளில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். சிலரது எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம். தொழில் செய்பவர்கள் வேலைகளை கூடுதல் கவனத்துடன் செய்ய வேண்டும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.




அக்கரப்பத்தனை தோட்த் தொழிலாளர்கள் ரூபா ஆயிரம் சம்பள உயர்வும், ரூபா பத்தாயிரத்தைத் தீபாவளி முற்பணமாகத் தரவேண்டும் என்று கோரியும்" அக்கரப் பத்தனைக் கொழுந்து மடுவத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தியிருக்கின்றனர்





சுகவாழ்வுப் பேரவையினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பரிசளிப்பு விழா யாழ்.வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்றபோது... இதற்கான அனுசரணையை இணுவில் லயன்ஸ் கழகம் வழங்கியிருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.



கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் வாரத்தினை அனுஸ்டிப்பதற்கான முன்னேற்பாடாக அண்மையில் சிரமதானப் பணிகள் நடைபெற்றன.




திருகோணமலை பொது வைத்தியசாலையிலும், கந்தளாய் தள வைத்தியசாலையிலும் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தினவிற்குப் பதவி வழங்கக் கூடாது எனத் தெரிவித்து வைத்தியர்கள் போராட்டம் நடத்தினர்.



கிளிநொச்சி மாவட்ட பொது நூலகத்திற்குச் சொந்தமான காணி 9வருடங்களுக்குப் பின்னர் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளது.

# யார் ஏழை? சிறுவனின் பார்வை!




ஒரு ஊரில் ஒரு பெரும் பணக்காரர் இருந்தார். அவருக்கு ஒரே மகன். மிகவும் செல்லமாக அவன் வளர்க்கப்பட்டான். பருவ வயது வந்தது அவனுக்குப் பொறுப்புத் தர எண்ணினார் அவர். ஆனால் மகனுக்கு உலக வாழ்க்கை இன்னதென்று விளங்கவில்லை. அவன் உலகத்தைத் தெரிந்த பின்பு அவருக்குப் பொறுப்புத் தரலாம் என்று எண்ணினார்.

அவனை ஒரு மாத காலம் சேரி மக்கள் வாழ்கின்ற பகுதியில் அந்த மக்களோடு மக்களாகத் தங்கி வாழ்ந்து பின்வருமாறு பணித்தார். ஒரு மாதமான பின்பு மகன் வீட்டுக்கு வந்தான். " மகனே வாழ்க்கையில் என்ன கற்றுக்கொண்டாய் "என்று தந்தை கேட்டார்.

“அவர்களிடம் நிறைய அறிந்து கொண்டேன் அப்பா. அவர்கள் நம்மை விட பணக்காரர்களாகவும், சுதந்திரமானவர்களாகவும், சுகமாகவும், பயமற்றும் வாழ்கிறார்கள்” என்றான் மகன்.

“எப்படிச் சொல்கிறாய்” எனத் தந்தை கேட்டார்.

“நாம் இங்கு அலங்கார செயற்கை விளக்குகள் ஏற்றி வாழ்கிறோம். அவர்களோ நட்ச்சதிரங்களையே விளக்குகளாகக் கொண்டு வாழ்கிறார்கள். நாம் நமக்கான உணவையே விலை கொடுத்து வாங்கி உண்கிறோம். அவர்கள் தங்களுக்கான உணவைத் தாங்களே உற்பத்தி செய்கிறார்கள். நாம் அறைகளுக்குள் வாழ்கிறோம். அவர்களோ சுதந்திரமாக சந்தோசமாக பரந்த வெளியில் வாழ்கிறார்கள். அவர்களை ஏழைகள் என்று எப்படி சொல்ல முடியும்? “ என்றான் மகன்


எனவே வாழ்க்கை என்பது சுதந்திரத்திலும் உறவுகளிலும் மலர்ந்திருக்கிறது என்பதை மகன் கற்றுக் கொண்டதை அறிந்து தந்தை மகிழ்ச்சியடைந்தார்.




## ஆத்திசூடி அறிவோம்

1. கீழ்மை அகற்று
   இழிவான குணஞ் செயல்களை நீக்கு.
2. குணமது கைவிடேல்
   நன்மை தரக்கூடிய நல்ல குணங்களை பின்பற்றுவதை நிறுத்திவிடாதே(கைவிடேல்).
3. கூடிப் பிரியேல்
   நல்லவரோடு நட்பு செய்து பின் அவரை பிரியாதே.
4. கெடுப்பது ஒழி
   பிறருக்கு கேடு விளைவிக்கும் செயல்களை செய்யாதே.
5. கேள்வி முயல்
   கற்றவர் சொல்லும் நூற் பொருளை கேட்பதற்கு முயற்சி செய்.

## குறள் தரும் சேதி



குறள் 811:

**ஒரு குறள் இரு உரை**

**பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை**
**பெருகலிற் குன்றல் இனிது.**

**மு. வரதராசன் உரை:**
அன்பு மிகுதியால் பருகுவார் போல் தோன்றினாலும் நற்பண்பு இல்லாதவரின் நட்பு, வளர்ந்து பெருகுவதைவிடத் தேய்ந்து குறைவது நல்லது.

**மு. கருணாநிதி உரை:**
நல்ல பண்பு இல்லாதவர்கள் அன்பு வெள்ளத்தில் நம்மை மூழ் கடிப்பதுபோல் தோன்றினாலும் அவர்களது நட்பை, மேலும் வளர்த் துக் கொள்ளாமல் குறைத்துக் கொள்வதே நல்லது.

## அட அப்படியா?
## விநோதமான பாலூட்டி



குட்டி போட்டு பால் தருவதால், வௌவால் பறவை இனத்தில் சேர்க்க முடியாது. வௌவாலுக்கு கண் உண்டு. இருந்தாலும் அதற்கு கண் பார்வைத் திறன் தேவையில்லை. வௌவால் “சவுண்ட் ரேஞ்சிங்” என்ற முறைப்படி இருளில் மோதிக் கொள்ளாமல் தன் விருப்பத்திற்கு ஏற்ப பறந்து செல்கிறது. இதற்கு “அல்ட்ரா சவுண்ட் “என்ற ஒலி அலைகள் உதவுகின்றன. மனிதர்களால் 80 முதல் 20 ஆயிரம் ஒலி அலைகளையே உணர முடியும்.

வௌவாலின் தொண்டையில் இருந்து ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் “சைக்கிள்” அளவில் ஒலி உண்டாகிறது. இந்த சத்தத்தை நம்மால் உணர முடியாது. இவை சத்தத்தை சின்ன சின்ன துடிப்பலைகளாக வெளிப்படுத்தும்.

தூரத்தில் ஏதாவது தடை இருந்தால், வௌவால் வெளிப்படுத்தும் ஒலிக்கும், அந்த ஒலி எதிரொலித்து திரும்பும் ஒலிக்கும் இடையே உள்ள நேர வித்தியாசத்தை உணர்ந்து, தடை இருக்கும் இடத்தை அறிந்து அதற்கேற்ப சாமார்த்தியமாக பறக்கிறது வௌவால்.

## அறிவோம் உயர்வோம்
## நோர்டிக் நாடுகள்



வட ஐரோப்பாவிலுள்ள ஒரு தீவு நாடு. நோர்டிக் (Nordic) நாடுகள் என்று அழைக்கப்படுபவற்றில் ஒன்று. நாட்டின் மொத்தப் பரப்பில் 11மூடு பனியால் சூழப்பட்டிருக்கிறது. இது எரிமலைகளின் நாடு. 200 எரிமலைகள் உள்ளன. வெந்நீர் ஊற்றுகள் அதிகம். இங்கிருந்து ஏராளமான புத்தகங்களும் பத்திரிகைகளும் வெளிவருகின்றன. இந்த நாட்டுக் கொடியில் இருக்கும் சிவப்பு எரிமலையையும் வெள்ளை பனியையும் நீலம் கடலையும் குறிக்கின்றன. இந்த நாட்டின் வடக்கு பகுதியில் கோடைக் காலத்தில் 72 நாட்களுக்குச் சூரியன் மறைவதில்லை. இலவசமாகக் கல்வி வழங்கப்படுகிறது. ஆர்க்டிக் நரி, பனி மான், பஃபின் பறவை, கம்பளி ஆடு, திமிங்கிலம் போன்றவை இந்த நாட்டின் முக்கியமான உயிரினங்கள்.

## செடி வளர்ப்பேன்

தாத்தா வைத்த தென்னை
தலையால் இளநீர் தருகிறது
பாட்டி வைத்த கொய்யாவும்
பழங்கள் நிறையக் கொடுக்கிறது


அப்பா வைத்த மாஞ்செடியொ
அல்வாபோல பழந்தருது
அம்மா வைத்த முருங்கையுமே
அளவில்லாமல் காய்க்கிறது

அண்ணன் வைத்த மாதுளையோ
கிண்ணம்போல காய்க்கிறது
சின்னஞ் சிறுவன் நானும் ஒரு
செடியை நட்டு வளர்ப்பேனே



## தமிழ் கற்போம்
### தமிழ்ச் சொல் அமைப்பு


ஓர் எழுத்து தனித்து நின்றோ ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் சேர்ந்து நின்றோ பொருள் தந்தால் அது சொல் எனப்படும். தமிழில் ‘மொழி’, ‘கிளவி’, ‘சொல்’, ‘பதம்’ ஆகியவை சொல்லைக் குறிக்கும் வேறு சொற்கள் ஆகும். சொல்லுக்கு வடிவம் உண்டு. சொல் பொருளைக் குறிப்பது. சொல்லின் அமைப்பு இறுக்கம் ஆனது. கட்டுக்கோப்பு உடையது. சொல் அடிச்சொல்லையும் ஒட்டுகளையும் கொண்டது. சொற்களைக் கொண்டு தொடர் எனப்படும் வாக்கியம் அமைக்கலாம். ஆனால் வாக்கியம்




அவ்வளவு இறுக்கம் உடையது அல்ல. ஒரு சொல்லின் பொருள் இடத்தை ஒட்டி அமையும். நான், நீ, அவன் என்பவை இடத்தை ஒட்டிப் பொருள் தருகின்றன.

| | | |
|---|---|---|
| நான் | - | தன்மைப் பெயர் |
| நீ | - | முன்னிலைப் பெயர் |
| அவன் | - | படர்க்கைப் பெயர் |

# சீடராக என்ன செய்யவேண்டும்!



யேசுவின் பின்னால் திரளான மக்கள் சென்று கொண்டிருந்தார்கள். இயேசுவின் பின்னால் சென்ற மக்கள் அவருடைய புதுமைகளினாலோ, போதனைகளினாலோ, அப்பங்களினாலோ ஈர்க்கப்பட்டவர்கள்.

பெருந்திரளான மக்கள் இயேசுவோடு சென்றுகொண்டிருந்தனர். அவர் திரும்பிப் பார்த்து அவர்களிடம் கூறியது:

என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர் சகோதரிகள் ஆகியோரையும், ஏன், தம் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது. தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது.

"உங்களுள் யாராவது ஒருவர் கோபுரம் கட்ட விரும்பினால், முதலில் உட்கார்ந்து, அதைக் கட்டிமுடிக்க ஆகும் செலவைக் கணித்து, அதற்கான பொருள் வசதி தம்மிடம் இருக்கிறதா எனப் பார்க்கமாட்டாரா? இல்லாவிட்டால் அதற்கு அடித்தளமிட்ட பிறகு அவர் கட்டி முடிக்க இயலாமல் இருப்பதைப் பார்க்கும் யாவரும் ஏளனமாக, 'இம்மனிதன் கட்டத் தொடங்கினான் ஆனால் முடிக்க இயலவில்லை' என்பார்களே!

"வேறு ஓர் அரசரோடு போர் தொடுக்கப்போகும் அரசர் ஒருவர், இருபதாயிரம் பேருடன் தமக்கு எதிராக வருபவரைப் பத்தாயிரம் பேரைக் கொண்டு எதிர்க்க முடியுமா என்று முதலில் உட்கார்ந்து சிந்தித்துப் பார்க்க மாட்டாரா? எதிர்க்க முடியாதெனில், அவர் தொலையில் இருக்கும்போதே தூதரை அனுப்பி, அமைதிக்கான வழியைத் தேட மாட்டாரா?

அப்படியே, உங்களுள் தம் உடைமையையெல்லாம் விட்டுவிடாத எவரும் என் சீடராய் இருக்க முடியாது.

என்னைப் பின்பற்ற வேண்டுமெனில் உறவுகளையும், உலகையும் வெறுக்க வேண்டும். அதாவது, அவை எல்லாவற்றையும் விட அதிகமாய் என்னை நேசிக்க வேண்டும். உலகின் வசீகரங்கள் அனைத்தையும் விட்டு விட்டு என்னைப் பின்பற்ற தயாராய் இருக்க வேண்டும்.

அவர் தன்னையே வெறுக்க தயாராய் இருக்க வேண்டும். தன் உயிரை விட அதிகமாய் என்னை நேசிக்க வேண்டும். என்னைப் பின்பற்றுவது என்பது போராட்டமானது. சவாலானது. சொந்த உயிரைக் கூட இழக்க தயாராய் இருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

# தீபாவளி சார்ந்த நம்பிக்கைகள்



மாறுபட்ட வகையில் கொண்டாடப்படும் தீபாவளி.


தீபாவளி கொண்டாட்டம் என்பது இந்தியா முழுவதும் மாறுப்பட்டதாக கொண்டாடப் படுகிறது. இந்தியாவில் ஒவ்வொரு பகுதிக்கும் என பிரத்யேகமான கொண்டாட்டங்கள் இருக்கின்றன.

இந்தியா முழுவதும் பண்டிகைகள் என்பது கொண்டாடப்படும் போது நம்பிக்கை சார்ந்த விஷயங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு பூஜைகளும் பண்டிகைகளும் கொண்டாட்ட மகிழ்ச்சியை தரும் என்பதுடன் நமது வாழ்வின் வளங்கள் பன்மடங்கு பெருகுவதற்கும், ஆரோக்கியத்தை பெறுவதற்குமான முயற்சிகள்தான். சமய சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் என்பது பெரும்பாலும் வறுமைகோட்டிற்கு கீழ் உள்ளவர்களால் தான் அதிகமாக செயல்படுத்தப்படுகிறது. இறை நம்பிக்கை என்பதுடன், தொடர்ந்து வாழ்வை நகர்த்த மேம்பட்ட முயற்சியாகவும்தான் கொள்ள வேண்டும்.

அது போல் தீபாவளி பண்டிகை சமயத்திலும் சில சமய சடங்குகள் மற்றும் நம்பிக்கை சார்ந்த விஷயங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. தீபாவளி சமயத்தில் செய்யப்படும் இந்த தீர்வுக்கான முயற்சிகள் என்பது ஓம் வரைவது, சங்கு ஒலிக்க செய்வது, விநாயகர் - லட்சுமி மந்திரங்கள், கரும்பு வேர் வணங்குவது, தாமரை மலரால் பூஜை செய்வது போன்றவாறு உள்ளன. இவற்றை தீபாவளி சமயத்தில் செய்யும் போது நமது வறுமை நிலை ஒழிந்து செல்வ நிலை மேம்பாடு அடையும் என்பதாக நம்பப்படுகிறது. அதன் காரணமாக தீபாவளி பூஜையோடு இந்த நம்பிக்கை சார்ந்த விஷயங்களை மேற்கொள்ளும் பழக்கம் பலரிடமும் இருந்து வருகிறது.

# பாவங்களை போக்கும் தொழுகை



நிகழ்ந்துவிட்ட பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், பாவங்கள் இனிமேல் நிகழாமல் இருப்பதற்கும் ஒரே வழி தொழுகைதான். இதுகுறித்து இறைவசனம் கூறுவது மிகப்பொருத்தமாக அமைகிறது.

'பகலின் இரு ஓரங்களிலும், இரவின் பகுதிகளிலும் தொழுகையை நிலைநாட்டுவீராக! நன்மைகள் தீமைகளை அழித்துவிடும். படிப்பினை பெறுவோருக்கு இது அறிவுரை'. (திருக்குர்ஆன் 11:114)

தினமும் ஐந்துவேளைத் தொழுகைகள் உண்டு என்பதை இந்த இறை வசனம் சுட்டிக் காட்டுகிறது. பகலின் இரு ஓரங்கள் என்பது லுஹர், அஸர் ஆகிய இருவேளைத் தொழுகைகளை குறிக்கிறது. இரவின் பகுதிகள் என்பது மக்ரிப், இஷா, சுபுஹ் ஆகிய மூன்று நேரத் தொழுகைகளை குறிக்கிறது.

தொழுதால் நன்மைகள் கிடைக்கும் என்பது ஒருபக்கம். தொழுது வருவதால் சிறுசிறு பாவங்கள் மன்னிக்கப்படும் என்பது அதன் மறுபக்கம் ஆகும்.

'ஐவேளைத் தொழுகைகள், ஜும்ஆத் தொழுகை அடுத்த வார ஜும்ஆத் தொழுகை வரை... ரமலான் நோன்பு அடுத்த ஆண்டு ரமலான் நோன்பு வரை, இவை இடையில் ஏற்படும் சிறுபாவங்களுக்கு பரிகாரமாக அமைந்து விடும். பெரும்பாவங்களை தவிர்ந்திருக்க வேண்டும் என நபிகள் (ஸல்) கூறினார்கள்'. (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி) நூல் : முஸ்லிம்)

உஸ்மான் (ரலி) அவர்கள் ஒருநாள் ஓரிடத்திற்கு வந்து அமர்ந்தார்கள். அவருடன் சில மக்களும் அமர்ந்தனர். அவர்களிடம் தொழுகைக்கு அழைப்பு கொடுக்கும் (பாங்கொலி) நபரும் வந்தார். அவரிடம் ஒரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் கொண்டுவரும்படி உஸ்மான் (ரலி) வேண்டினார்கள். பிறகு, அவர்கள் அங்கசுத்தி (உளூ) செய்தார்கள். 'நான் உளூ (அங்கசுத்தி) செய்தது போன்றே நபி (ஸல்) அவர்களும் செய்தார்கள். பிறகு எவர் நான் உளூ செய்தது போன்று உளூ செய்து, பிறகு எழுந்து லுஹர் (முற்பகல்) தொழுகையைத் தொழு கிறாரோ, சுபுஹ் (அதிகாலை) தொழுகைக்கும், லுஹர் தொழுகைக்கும் இடையில் நிகழ்ந்த சிறுபாவங்கள் மன்னிக்கப்படும். பிறகு அஸர் (மாலை நேரத்) தொழுகையை நிறைவேற்று கிறாரோ, அவருக்கு அஸருக்கும் லுஹருக்கும் இடையில் நிகழ்ந்த சிறுபாவங்கள் மன்னிக்கப்படும். பிறகு அவர் மக்ரிப் (சூரியன் மறையும் நேரத்) தொழுகையை தொழுதால், இதற்கும் அஸருக்கும் இடையில் நிகழ்ந்த சிறுபாவங்கள் மன்னிக்கப்படும். பிறகு இஷா (இரவு நேர)த் தொழுகையை தொழுதால், இதற்கும் மக்ரிபுக்கும் இடையில் நிகழ்ந்த சிறுபாவங்கள் மன்னிக்கப்படும். பிறகு அவர் இந்த நிலையிலேயே இரவில் நன்றாகத் தூங்கி, பிறகு எழுந்து உளூ செய்து, சுபுஹ் தொழுதால், இதற்கும் இஷாவுக்கும் இடையே நிகழ்ந்த சிறுபாவங்கள் மன்னிக்கப்படும். இந்தத் தொழுகைகள் யாவும் நன்மையான காரியங்கள் ஆகும். நன்மைகள், பாவங்களை போக்கிவிடும் என்று கூறினார்கள்'. (நூல்: அஹ்மது)

'உங்களில் ஒருவரின் வாசலுக்கு அருகே நீர் அதிகம் நிறைந்த ஆறு ஒன்று இருந்து, அதில் ஒவ்வொரு நாளும் ஐந்து தடவை குளித்தால், அவரின் உடலில் அழுக்கு தேங்கி நிற்குமா? இது குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்' என நபி (ஸல்) கேட்டார்கள். 'இறைவனின் தூதரே! அவ்வாறு இருக்காது' என்று நபித் தோழர்கள் கூறினார்கள். 'இவ்வாறே ஐவேளைத் தொழுகைகளின் வாயிலாக பாவங்களையும், தவறுகளையும் இறைவன் அழித்துவிடுகிறான்' என நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி), நூல் : முஸ்லிம்)

பாவங்களை போக்கும் தன்மை ஐவேளைத் தொழுகைகளுக்கு மட்டுமல்ல, அனைத்து விதமான தொழுகைகளுக்கும் (அந்தத் தன்மை) உண்டு.

'ஒவ்வொரு தொழுகையும் அதற்கு முன்பு ஏற்படும் தவறுகளை அழித்துவிடும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்'. (அறிவிப்பாளர்: அபூ அய்யூப் (ரலி), நூல் : அஹ்மது)

# மாவீரர் நாள்: அகௌரவம் வேண்டாமே...!

ஆவெட்டியாவெளி
வேலப்பன்



இலங்கையின் பெரும்பான்மை இனத்தவராகிய சிங்களவர் தமக்கென ஒரு ஆயுதக் குழுவை உருவாக்கியபோது ஒன்றே ஒன்று அவர்களுக்குப் போதுமானதாகவிருந்தது. ஆனால் தமிழராகிய நாங்களோ உருவாகியது, கலந்தது, கரைந்தது, கலைந்தது என மொத்தமாக 36 இயக்கங்கள் கண்டோம். எப்போதுமே இன்னொரு தமிழனைச் சகிக்க மாட்டோம். தமிழருக்கு நிர்வாகத் திறன் இல்லை என்பதை நிரூபிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் வரை செல்வோம் என்பதை வடக்கு மாகாண சபை விவகாரத்தில் காட்டினோம்.

வீடமைப்பு விவகாரத்தில மனோ கணேசனிடமா? சுவாமிநாதனிடமா? இந்த விடயத்தை ஒப்படைப்பது என்ற நிலை வந்தபோது சஜித் பிரேமதாஸவிடமே ஒப்படையுங்கள் என்றார் சுமந்திரன். தேர்தல் முடிந்ததும் தமிழருக்கு எதையெதைப் பெற்றுக் கொள்வது என்று தீர்மானிப்பதை விட எந்தத் தமிழனுக்கு அமைச்சுப் பதவி கொடுக்கக்கூடாது, யாருக்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கக்கூடாது என்ற விடயத்தில் மட்டுமே தமிழ்த் தலைமை சிங்களத்திடம் நிபந்தனை போடும் இதுதான் தமிழரின் தனித்துவம், கேட்டால் தமிழன்...டா” என்போம்.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், திலீபன் நினைவு ஆரம்ப நாள் நிகழ்வு போன்றவையும் பிரபாகரன் என்ற தலைவர் உயிருடன் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் விதத்திலேயே நிகழ்ந்தன. தற்சமயம் காசு என்ற கதாயுதத்துடன் புலம்பெயர் தேசத்திலுள்ள சிலர் மாவீரர் நாளை கேவலப்படுத்துவதென முடிவு கட்டிவிட்டனர். குறிப்பிட்ட ஒரு கட்சியின் சில உறுப்பினர்களை இதற்காக உசுப்பிவிட்டுள்ளனர். அவர்களும் கிடைத்த வரை இலாபம் எனக் களமிறங்கியுள்ளனர்.

இவ்வருட மாவீரர் நாள் தொடர்பாக மட்டக்களப்புக் கல்லடியில் ஒரு ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது. மூன்று மூத்த முன்னைநாள் போராளிகள் இதில் கருத்துத் தெரிவித்தனர். அந்தந்தப் பகுதியிலுள்ள கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மாவீரர் குடும்பத்தினர் அடங்கிய பொது நினைவேந்தல் குழுக்களை அமையுங்கள் வகையில் மாவீரர் நாளின் புனிதத்தைப் பேணும் வகையில் எமது நடவடிக்கைகள் அமையட்டும் எனத் தமது எதிர்பார்ப்பை வெளியிட்டனர். இந்த ஊடகவியலாளர் சந்திப்புக்கு முன்னதாகவும் பின்னதாகவும் அப்படியே கருமங்கள் நடைபெற்றன. இதனைப் பொறுப்பார்களா புலம்பெயர் தேசத்துக் கொம்புகள்.குறிப்பிட்ட கட்சியில் சிலருக்குக் காசை இறைத்து குழப்பத்தை ஏற்படுத்தத் தீர்மானித்து விட்டனர்.

மட்டு. வாகரையில் நினைவேந்தல் குழு அமைத்து சிரமதானம் செய்து குழுவில் உள்ளோர் விபரத்தையும் வெளியிட்டாயிற்று. குழப்பத்தை ஏற்படுத்த சுவிஸ்வாசிகள் சிலர் முனைந்துள்ளனர். களத்தில் போராடியோர் படும் சிரமங்களை அவர்களின் உணர்வுகளை, மாவீரர் குடும்பங்களின் நிலைபற்றிக் கொஞ்சமும் கவலைப்படவில்லை இவர்கள். சிறையிலுள்ள அரசியல் கைதிகளின் வழக்குகள் அவர்களின் குடும்பநலன் தொடர்பாக உண்மையிலேயே அக்கறையுள்ள தரப்புகள் மேற்கொள்ளும் முயற்சிகளைக் குழப்பவும் கொச்சைப்படுத்தவும் இவர்கள் முனையும் அதேசமயம், களத்திலும் தமது கோளாறைத் தொடங்கியுள்ளனர்.

மட்டக்களப்பில் குழப்பத்தை ஏற்படுத்த முனையும் சுவிஸ்வாசி மாவடிமுன்மாரியில் தனது ஏற்பாட்டில் மதில் கட்டினால் அதற்குள் எவரையும் செல்ல அனுமதிக்க மாட்டேன் எனத் தெரிவித்துள்ளார். படுவான்கரையில் காணி பிடிக்கும் விவகாரமா இது? இவ்வளவுக்கும் இவர் எந்தக் காலத்திலும் போராளியாக இருந்தவர் அல்ல. இவரது தந்தையோ, தாயோ, சகோதரர்களோ இயக்கத்தில் இருந்தவர்கள் அல்ல. உறவினர் ஒருவர் இருந்தார் அவ்வளவுதான். மட்டு. முனைக்காட்டிலுள்ள குறிப்பிட்ட கட்சியின் அமைப்பாளர் உள்ளூரில் தனது பருப்பு வேகாத நிலையில் வாகரைக்குச் சென்றுள்ளார். அங்கு ஏற்கனவே இரு பிரிவுகளின் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள் அடங்கிய மாவீரர் ஏற்பாட்டுக் குழு உள்ளது என்பதும் ஒரு மாவீரரின் துணைவிதான் பொருளாளர் என்று தெரிந்திருந்தும் குளறுபடிகளை ஏற்படுத்த முனைகிறார்.

வன்னிவிளாங்குளம் துயிலுமில்லத்தில் இதே கட்சியைச் சேர்ந்த ஒருவர் குழப்பத்தை ஏற்படுத்த முனைந்தார். இவர் அப்பகுதியைச் சேர்ந்தவர் என்ற வகையில் சகித்துக் கொண்டார்கள். தற்போது வெவ்வேறு துயிலும் இல்லங்கள் சார்பாக மாவீரர் நாளின் பெயரால் கல்லா கட்ட முனைகிறார்.

ஒரு இன்ஞ் பாகிஸ்தான் பைப் 2750 ரூபா (அதிகபட்ச விலை) என்றிருக்கும் நிலையில் 3100 ரூபா வீதம் 100 பைப்கள் வாங்க வெளிநாடுகளில் நிதி கோரியுள்ளார். குறிப்பிட்ட துயிலும் இல்லங்களுக்கு அருகில் புதுக்குடியிருப்பு, விசுவமடு என நகர்க் கடைகள் இருக்க மாங்குளத்தில் இந்த விலைக்கு வாங்கி தொழில்புரிய முனைகிறார். புலத்தில் கொத்துரொட்டி வியாபாரம் என்றால் களத்தில் பைப் வியாபாரம்.

இவ்வளவுக்கும் குறிப்பிட்ட கட்சித் தலைமை மாவீரர் நாள் நிகழ்வுகளில் குழப்பத்தை ஏற்படுத்தும் விதமாக நடந்துகொள்ளக் கூடாது என்று அர்த்தப்பட கட்சி ரீதியாக எந்த அடையாளத்தையும் ஏற்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தியதாகத் தெரிகிறது. இது வரவேற்கத்தக்கது. திலீபன் நினைவு இறுதிநாள் நிகழ்வின் போதும் உரியமுறையில் இக்கட்சி ஒத்துழைத்தமை குறிப்பிடத்தக்கது. கட்சித் தலைமையின் முடிவுக்கு மாறாக மட்டக்களப்பிலும் வன்னியிலும் அதன் உறுப்பினர்கள் எவ்வாறு நடந்துகொள்வது கட்சியினதும் அவர்களினதும் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.

புலம்பெயர்தேசங்களில் பல்வேறு காரணங்கள் கூறி நிதி சேகரிக்கப்படுகின்றது. இந்த நிதி தமிழரின் உணர்வை வெளிப்படுத்த, மனப்பாரத்தை இறக்கப் பயன்படுவதே நல்லது. இந்தப் போராட்டம் வட, கிழக்கு மக்களின் ஐக்கியத்தில் கட்டியெழுப்பப்பட்டது. கிழக்கு மாவீரர்களின் வித்துடல்கள் ஆயிரக்கணக்கில் விதைக்கபப்பட்டுள்ளன. குறிப்பாக தேராவில் துயிலும் இல்லத்தில் மட்டு. அம்பாறை மாவீரர்களினதும் முள்ளியவளையில்

திருமலையைச் சேர்ந்தோரினதும் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளன.

அதேபோல வித்துடல் கிடைக்காதோருக்கு டுகற்களும் நாட்டப்பட்டன. இவ்வாண்டு வித்துடல் விதைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோரை கிழக்கிலிருந்து அழைத்து வருவதற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். நினைவுக்கல் நாட்டப்பட்ட மாவீரர்களின் பெற்றோர் தத்தமது மாவட்டத்திலேயே டரேற்றலாம். மாவீரர் நாளின் பெயரால் நிதி சேகரிப்புக்கு உதவியோர், உதவவிருப்போர் இந்த விடயத்தை நிதி சேகரிக்க வந்தோர், வருவோரிடம் தெரிவியுங்கள். இது உங்கள் தார்மீகக் கடமை. களத்தில் எமது பிள்ளைகள் அருகருகே நின்று சமராடினர். ஒருவர் காயமடைந்தால் அடுத்தவர் தூக்கிச் சென்றார். தேவைப்படும் நேரத்தில் குருதியையும் வழங்கினர். கடைசியில் அருகருகே விதைக்கப்பட்டனர்.

இந்தப் போராளிகளிடம் இருந்த ஐக்கியம் அவர்களின் பெற்றோரிடமும் தொடரட்டும். மாவீரர்களின் பெற்றோரின் மனம் கோணாத வகையில் இங்குள்ள அனைவரும் நடந்து கொள்ள வேண்டும். பாடசாலைகளை இவ்வாறான நிகழ்வுக்குப் பயன்படுத்த முடியாது. பொதுநோக்கு மண்டபங்களும் இத்தேவைக்குப் போதுமானவையல்ல. எனவே துயிலுமில்லங்களுக்கு அருகிலுள்ளோர் கிழக்கிலிருந்து வருகை தரும் பெற்றோரைப் பொறுப்பெடுத்து உபசரித்து அன்புடன் வழியனுப்பி வைக்கட்டும். எனவே இந்தப் பணி சிறப்புற நடைபெற வேண்டும் என்பதைப் புலம்பெயர் நாடுகளில் தலைப்பாகை அணிந்திருப்போரிடம் வலியுறுத்துங்கள்.


மேலும் களத்தின் நிலைமைகள் வேறு புலத்தின் நிலைமைகள் எதிர்மாறு. இங்கே எல்லா மாவீரர்களின் பெற்றோரும் ஒரே மாதிரியாக நடத்தப்பட வேண்டும் என்பதற்காக மரக்கறியுடனான உணவே வழங்கப்படுவதுண்டு. புலத்திலோ மாவீரரின் பெயரால் கொத்துரொட்டி வியாபாரம் நடைபெறும். மாவீரர் பாடல், மணியொலி, சுடரேற்றல், தலைவரின் உரை என்பனவே முன்னர் இடம்பெற்றன.

தலைவருக்கு நிகரான வேறொருவர் எந்தக் காலத்திலும் தோன்ற முடியாது என்பதால் உரை தற்போது தேவையில்லை. உரையை விட உணர்வே முதன்மையானது. பொங்கிவழியும் கண்ணீருடனேயே தங்கள் பிள்ளைகளுக்கு என்ன சொல்ல விரும்புகிறார்களோ அதை மனதால் சால்லிக் கொள்வர் பெற்றோர். அத்துடன் றிதுநேரம் தம்மை ஆசுவாசப்படுத்திக் காண்டு தமது இல்லத்துக்குச் செல்லட்டும் வர்கள். அந்த அமைதி நிலையினை வரும் குழப்பப வேண்டாம். (குறிப்பாக டகவியலாளர்கள்) புலம்பெயர் தேசத்தில் பால நெஞ்சில் கையை வையுங்கள் தியப்பிரமாணம் எடுங்கள் என்றெல்லாம் ாத்தில் கூறத் தேவையில்லை. அந்த டைமுறை இங்கு ஏற்கனவே இருக்கவில்லை. னவே, எந்த நிகழ்ச்சி நிரலையும் திணிக்க பண்டாம் என நிதி சேகரிப்பாளர்களிடம் றுங்கள். பிள்ளைகளைக் கொடுத்துவிட்டுத் விக்கும் பெற்றோருக்கு வேறு சிரமங்களை ங்கடங்களை ஏற்படுத்த வேண்டாம் என றுதியாகக் கூறுங்கள்.

மீண்டும் வலியுறுத்தும் விடயம் ாத்தில் எந்தக் கோளாறையும் ஏற்படுத்த பண்டாம் எனப் புலத்திலுள்ளோர் பந்தப்பட்டோரிடம் சொல்லுங்கள். ாத்தின் நிலையைப் புரியாது மாவீரரின் பற்றோரைப் பங்குபோட முனையும் செயலை வத்துமாறு சம்பந்தப்பட்ட கட்சியின் னை விரும்புவோர் அக்கட்சித் தலைமைக்கு டித்துரைக்கட்டும். ●

# எண்ணற்ற புதிர்களில் ஒன்றாக... பீரங்கியின் முன் நின்ற அந்த மாமனிதன் யார்?





உலகின் தீர்க்கப்படாத எண்ணற்ற புதிர்களில் ஒன்றாக இன்னும் இக்காட்சி இருக்கிறது!

கம்யூனிஸ சீனாவின் நவீன வரலாற்றில் அழிக்கவியலாத கொடுந்துன்பியல் சம்பவமாகப் பதிந்துள்ளது சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் 1987 ஆம் ஆண்டு நிகழ்ந்த "தியானென்மென்" சதுக்கச் சம்பவம்.

சாமான்ய மக்களுடன் இணக்கமாகப் பழகிவந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் ஹுயாவோ வலிந்துப் பதவி நீக்கம் செய்யப்பட்டதும், அதைத் தொடர்ந்து உடல் நலமின்றி ஹு உயிர் நீர்த்ததும், அறிவுஜீவிகள் மற்றும் மாணவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை கிளறச் செய்தது. இதனால், 1987 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் முதலே பல்வேறு போராட்டங்கள் பெய்ஜிங் நகர வீதிகளில் அரங்கேறிய வண்ணமிருந்தன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் பெய்ஜிங்கில் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், கொதிப்படைந்த சீன கம்யூனிஸ அரசு இரும்புக் கரம் கொண்டு கலவரக்காரர்களை நசுக்கியது. அதில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர். தோராயமாக, 2,600 பேர் இறந்திருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டாலும், சீன அரசு தன் மீது படிந்துள்ள பாவங்களின் கறையைத் துடைத்துக்கொள்ளும் நோக்கில் மரண விகிதத்தை ரகசியமாக மறைத்து பாதுகாத்து வருகிறது. "அக் கலவர காலக்கட்டத்தில் ஒரு உயிர்கூடப் பலியிடப்படவில்லை" என்பது சீன அரசு முன்வைக்கும் அபத்தமான வாதம்.

தியானென்மென் சதுக்க சம்பவத்தின் ஓலங்களை உலக மக்களின் பார்வையிலிருந்தும், அரசியல் அரங்கிலிருந்தும் பதுக்கிவிடும் எண்ணத்தில், அந் நாட்களில் ஊடகங்களும், இணையதளமும் முடக்கப்பட்டிருந்ததால் கலவரத்தின் சுவடுகள் இன்றுவரையிலும் முற்றிலும் மர்மமாக உள்ளன. எனினும், மாணவப் போராட்டங்களை முழுமையாக துடைத்தெறிந்துவிட்ட எக்காளத்துடன் அணிவகுத்து வரும் ராணுவ டாங்கியின் முன்னால் தனியொருவனாக நின்று வல்லாதிக்க அரசுக்கு சவால்விடும் தீரம்கொண்ட மனிதன் ஒருவனின் புகைப்படம், தியானென்மென் சதுக்க கோர சம்பவங்களின் நினைவாக எஞ்சியுள்ளது.

"ஜெஃப் வைட்னர்" எனும் அமெரிக்க புகைப்படக்காரரால் எடுக்கப்பட்ட அப்புகைப்படம் இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த புகைப்படங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது. டைம் பத்திரிகையால் வெளியிடப்பட்ட உலகின் நூறு தலைசிறந்த மனிதர்களுள் ஒருவராக அந்த மனிதரும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இத்தனைக்கும் அந்த மனிதன் யாரென்ற தகவல்களையோ, அவர் குறித்த செய்திகளையோ இதுவரையிலும் யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. தியானென்மென் சதுக்க சம்பவத்தின்போது உள்ளூர் ஊடகங்கள் முடக்கப்பட்டிருந்ததால் பெய்ஜிங் நகர மக்களுக்கே அச் சம்பவம் பல ஆண்டுகளுக்கு பின்னர்தான் தெரியவந்துள்ளது. அதனால், அவர் குறித்த விடயங்கள் புதிராகவே இன்றுவரையிலும் நிலைக்கொண்டுள்ளது. தியானென்மென் சதுக்க சம்பவத்துக்கு பிறகான 13 வது நாளில் அவர் தூக்கிலிடப்பட்டார் என்று ஒரு செய்தியும், அவர் இரு மாதங்களுக்கு பிறகு சிறைப் பிடிக்கப்பட்டார் என்றும், இன்னமும் நகரத்தின் மையத்தில் ரகசியமாக உயிர் வாழ்கிறார் என்று இன்னொரு செய்தியும் அவர் குறித்து முன்னுக்குப் பின் முரணாகக் காணப்படுகிறது.

எனினும், உயிரை விழுங்கும் ராணுவ டாங்கிகளின் எதிரில் எவ்வித சலனமும் காட்டாமல் நெஞ்சில் உரத்தோடு தன் எதிர்ப்பினை அழுத்தமாக பதிவுசெய்த முகமற்ற அம் மனிதர் கொடுங்கோன்மைக்கு எதிரான குறியீடாக இன்று உலக மக்களால் கருதப்படுகிறார். உலகின் தீர்க்கப்படாத எண்ணற்ற புதிர்களில் ஒன்றாக கைவிடப்பட்ட டேங்க் மேனின் நெஞ்சுரம் சர்வாதிகார பிடியிலிருந்து விடுதலை பெற விரும்பும் அனைவருக்குமான பாலபாடம்.

# யௌவனம்


■ கே.எஸ்.சுதாகர்

கோட்டைப் புகையிரத நிலையம் ஒரே ஆரவாரமாக இருந்தது. இவன் சன நெரிசலில் முண்டியடித்துக் கொண்டு புகையிரதத்தினுள் ஏறிக்கொண்டான். 'ஹாண்ட் பாக்'கை மேலே வைத்துவிட்டு 'கோணர் சீற்'றைக் கைப்பற்றிக் கொண்டான். இருக்கும் இடம் வசதியானதும் சுற்றுமுற்றும் பார்த்தான். இவனது இருக்கையின் அருகருகே இரண்டு வயது முதிர்ந்தவர்கள். எதிராக இருந்த மற்ற 'கோணர் சீற்'றில் வாட்ட சாட்டமான ஒரு இளைஞன். அவன் தனது பார்வையை வெளியே எறிந்துவிட்டுக் காத்திருந்தான். அந்த எறிதலில் ஏதோ விஷேசம் இருப்பது கண்டு இவனும் அத்திசை நோக்கினான். புகையிரதத்திற்கு வெளியே அழகிய ஒரு இளம் பெண். அவள் அருகே பையன் ஒருவனைத் தூக்கி வைத்திருந்தபடி சேலை அணிந்த இன்னொரு வயது முதிர்ந்த பெண்.

அந்த இளம்பெண் ஒரு கலைப்படைப்பு. அப்படித்தான் இருக்க வேண்டும். அடிக்கடி சட்டையை மேலும், பாவாடையைக் கீழும் இழுத்துவிட்டுக்கொண்டாள். இரட்டைப் பின்னலைத் தூக்கிப் பின்னாலே எறிந்து கொண்டாள். இரட்டைப் பின்னலுக்கு தப்பிய முடி, புகையிரத நிலையத்தின் செயற்கை ஒளியில் பொன்னிறமாகத் தகதகத்து காற்றினில் துடித்துக் கொண்டிருந்தது. பொக்கற்றுக்குள்ளிருந்த 'லிப்ஸ்டிக்'கை எடுத்து உதட்டருகே கோடிழுத்துக் கொண்டாள். உதடுகளை மேலும் கீழும் அசைத்து சப்புக்கொட்டி அழகு காட்டினாள். மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு இருபது இருபத்திரண்டு வயது இருக்கலாம்.

இவன் தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தான். புகையிரதம் புறப்படுவதற்கு இன்னமும் இரண்டோ மூன்று நிமிடங்கள் தானிருந்தன. புகையிரதம் கொஞ்சம் தாமதித்துப் புறப்பட்டால் நல்லது போல இருந்தது. அவளைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். மனம் பரபரப்படையத் தொடங்கியது. இன்னும் சற்று நேரத்தில் அவள் மறைந்துவிடுவாள்.

புகையிரதம் புறப்படுவதற்காகக் கூவியது. அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது. சேலை அணிந்திருந்த பெண் - அந்த இளம்பெண்ணைத் தேற்றுவது போலவும், அவள் ஏதோ சிணுங்கிச் செல்லம் கொஞ்சுவது போலவும் தெரிந்தது. புகையிரதம் புறப்பட ஆயத்தமானதும் - பையனை அந்த இளம் பெண் அவளிடமிருந்து வாங்கிக்கொண்டாள். சேலை அவளைக் கட்டித் தழுவிக்கொண்டது. மறுகணம் பிள்ளை - பிள்ளையைத் தூக்கிக்கொண்டு சிட்டாகப் பறந்து வந்து புகையிரதத்தில் ஏறிக்கொண்டது. இவனுக்கு எதிராக மூலைக்குள்ளிருந்தவன் எழுந்துகொள்ள



- அவள் அந்த இடத்தை நிரப்பினாள். இருவரும் ஒருமுறை ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். அசப்பில் அவள் அண்ணனைப் போன்றிருந்த அவன், அந்தச் சிறுவனின் கன்னங்களைத் தடவிக்கொண்டே விறுவிறெண்டு இறங்கிப் போனான். அவள் கண்கள் அழுதுவிடுமாப்போல் கண்ணீர் ததும்பி நின்றது.

கீழே இறங்கிக் கொண்ட அவனும், சேலை அணிந்த பெண்ணும் 'பாய்' என்று அவளிற்கு கை காட்டினார்கள். புகையிரதம் புறப்பட்டது.

எந்த தேவதையின் கடைக்கண் பார்வை விழாதோ என ஏங்கினானோ அந்த தேவதை இப்பொழுது வரம் கொடுப்பதற்காக இவனின் முன்பாக கறுப்பு என்றாலும் பளிங்கு போன்ற படிகம். முகத்திலே ஒரு தனிக்கவர்ச்சி. 'அவளின் தோடு - இன்னமும் தோணி போல காதிலே ஆடிக்கொண்டிருந்தது. இலவச அழகை தாராளமாக அள்ளிப் பருகிக் கொண்டான்.

பிரயாணம் எந்தவித கஸ்டமுமின்றி இருக்கவேண்டுமென இவன் வேண்டிக் கொண்டான். இவனிடம் அரச அலுவலகத்தில் வேலை செய்வதற்கான அத்தாட்சி இருந்த போதிலும் உள்ளூர ஒரு பயம். மோப்ப நாய்களுக்கு முகரும் சக்தி போல. முகமூடிகளுக்கும் இராணுவத்துக்கும் அப்பாவித் தமிழர்களைக் கண்டுபிடிக்கும் வல்லமை அதிகம். போனதடவை கூட வவனியாவிலிருந்து கொழும்பிற்கு வரும்போது மூன்று நான்கு தமிழ் இளைஞர்களை குருநாகலில் இறக்கி இராணுவத்தினர் கொண்டு போனார்கள்.

இவனிற்கு அருகே இருந்தவர்கள் தாங்கள் கொண்டுவந்திருந்த பேப்பரை வாசிக்கத் தொடங்கினார்கள். சிங்களப் பேப்பர். எதிரே இருந்த அவள் 'இவனை' ஒருதடவை பார்த்துவிட்டு, குழந்தையை மடி மீது சௌகரியமாக இருத்திக் கொண்டாள். இவன் செக்கச் செவேல் என்ற தோற்றம். 'கிளீன் ஷேவ்'. முறுக்கேறிய உடல். ஏதோ ஒரு உயர் அதிகாரியாக இருக்க வேண்டும். இவன் தன் கால்களைப் பக்கவாட்டில் நீட்டி அவள் சௌகரியமாக இருக்கும் பொருட்டு வழி சமைத்தான். சிறு பையன் சோர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். புகைவண்டி சட்டங்கள் மீது தனது தலையைச் சாய்த்து எங்கோ தொலைவில் மலையிடுக்கை நோக்கி அவளது பார்வை நீண்டு போனது. மலைத்தொடருக்கு மேலால் முகில்கூட்டங்கள் விரைந்து சென்றன. அவள் கண்களில் ஏக்கமும் சிந்தனையும் குடிகொண்டு இருந்தன. அவள் கூட ஒரு மழை முகில்தான்.

அவள் யார்? சிங்களப் பெண்ணா அல்லது தமிழ்ப் பெண்ணா?

ரயில் பூமி அதிர கடகடத்தபடி ஓடிக்கொண்டிருந்தது. ரயிலில் குலுக்கத்தில் - சிலவேளைகளில் அவளின் கால்கள் இவன் மீது பட்டு விலகின. குளிர்ந்த் பஞ்சிலாலான ஒரு உரசல். அந்தப் பொழுதெல்லாம் ஒரு 'ஜென்டில்மன்' ஆக இவன் நடந்துகொண்டான். இருப்பினும் அவன் மனதினுள்ளே ஒரு மிருகத்தின் பாதச்சுவடுகள் உள்ளே நுழைய எத்தனித்துக் கொண்டிருந்தன.

வெளியே இருட்டி விட்டிருந்தது. ராகம , பொல்காவெல போன்ற இடங்கள் தாண்டி விட்டன. உள்ளே சில விளக்குகள் மாத்திரம் எரிய பெரும்பாலானவர்கள் தூங்கி வழிந்துகொண்டிருந்தார்கள். அவள் இவனை ஒரு தடவை பார்த்துவிட்டு, ஜன்னலின் முன்னால் இருந்த சட்டத்தை இழுத்துவிட்டாள். புற உலகக் காட்சிகள் மறைந்தன.

'ஜனகன். பாலைக் குடிச்சிட்டுப் படு' தனது மகனை அழகு தமிழில் கூப்பிட்டாள். தமிழ்! தமிழ்ப்பெண்!! அந்தச் சிறுவன் பேந்தப் பேந்த விழித்து பால் போத்தலை வாயினுள் வைத்து உறுஞ்சினான். சற்று நேரத்தில் இருவரும் உறக்கத்திற்குப் போய் விட்டார்கள். இவன் தனது வலது கையை மடக்கி தலையணையாக்கி உறங்க முயற்சித்தான்.

உறக்கம் வரவில்லை. அவளை மேலும் கீழும் ஒவ்வொரு அவயவமாகப் பார்த்தான். கண் மூடி ஒரு மெருகுச்சிலை போல அவள் இருந்தாள். அவளின் எடுப்பான தோற்றமும், கிளர்ச்சியைத் தூண்டும் பருவ மொக்குகளும் இவனை அவளின்பால் ஈர்த்தது. கீறிப் பிளந்து விட்ட உதடுகளில், லிப்டிக்ஸ்கின் சாயம் வைரத்தில் பட்டுத் தெறிக்கும் ஒளியென மின்னியது. அவள் பாதங்கள் செருப்பை விட்டு வெளியே வந்து இவனுக்காகவே காத்துக் கிடந்தன. கொழுத்த குட்டிக் குட்டி விரல்கள். ஒரு விரலிலே 'மெட்டி'. அதன் வெண்ணிற ஒளி இவனை 'வா' என்று சமிக்கை செய்தது. இளமையின் மதர்ப்பில் உடல் சிலிர்த்து உன்மத்தம் கொண்டது. ஒட்டகம் இவனது கூடாரத்தினுள் கேட்பாரற்று நுழையத் தொடங்கியது.

எவ்வளவு நேரந்தான் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருப்பது! ஆமை தன் ஓட்டிற்குள்ளிருந்து அவயவங்களை வெளியே நீட்டி அவள் விரல்களிற்கு கொக்கி போட்டது. சங்கமித்ததில் அவன் உடல் மெல்ல நடுங்கத் தொடங்கியது. மனச்சாட்சி உறுத்த, அறிவு மழுங்கி உணர்ச்சி கொப்பளித்துப் பாய்கிறது. அவள் பேய்த் தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தாள்.

இவனது அங்க சேஷ்டைகள் ஒவ்வொரு படி நிலையாக உயர்ந்தது. ஒரு நிலையில் அவள் இருக்கையில் அங்கும் இங்கும் நெளிந்து விழித்தெழுந்தாள். இவன் கண்களை இறுக மூடிக்கொண்டான். சற்று நேரத்தில் மெதுவாக கண்களை இவன் திறந்த போது - அவள் ஒன்றுமே நடவாதது போல இவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளின் அந்தச் செய்கை இவனுக்கு விசித்திரமாக இருந்தது. தனக்கு உடன்பாடாக இருப்பது போலவே உணர்ந்து கொண்டான். அப்போது நேரம் இரவு ஒரு மணியைத் தாண்டியிருந்தது.

மேலும் அத்தகையதொரு சுகமான வாசிப்பிற்காகக் காத்திருந்தான். இரண்டாம் ஜாமப்பொழுதில் மீண்டும் தன் திருவிளையாடலை ஆரம்பித்தான். முற்றாக விளக்குகள் அணைந்திருந்தன. எங்கும் இருள். அந்தத் தடவை அவள் கண்களைத் திறந்து கொள்ளவேயில்லை. எந்தவித புறக்கணிப்பும் இல்லாமல் ஒரு அசைவற்ற ஜடம் போல பொறுமையாக சகித்துக்கொண்டாள். தனது முயற்சியில் தோற்றுப் போய் வலிந்த ஒரு கனவுக்குள் இவன் நழுவினான். கனவின் புலத்தில் அந்த அதிசய இரவில் அவளுடன் உறக்கம் கொண்டான்.

திடீரென இவனை யாரோ தொடுவது போல் இருக்க மெல்ல விழித்துக் கொண்டான்.

(18ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

# பிட்ஸாப் பிரியர்



ஆசைக்கு உண்பது வேறு ஆனால் அதையே காலங்காலமாக உண்டு வருவது வேறு. இங்கே ஒருவர் கடந்த 37 வருடங்களாக பிட்ஸா என்ற இத்தாலிய உணவை தினமும் உண்டு வந்திருக்கிறார். ,வர் அமெரிக்காவின் நியூஜேர்ஸ ி மாவட்டத்தைச் சேர்ந்தவர். பெயர் மைக் ரோமன். தொழிலால் ஆசிரியர்.

தனக்கு 4 வயதாக இருக்கும் போது அம்மா ஊட்டிய பிட்ஸா தான் நான் முதன்முதலாகச் சுவைத்த பிட்ஸா.

இவர் திருமண வைபவத்தின் போதும், நண்பர்களுக்கு "பிட்ஸா பார்ட்டி" வைத்திருக்கிறார்.

தேனிலவு கழிக்க வெளிநாடு சென்ற போதும், அங்கு புது மனைவியோடு விரும்பிச் சாப்பிட்டது பிட்ஸாதான் என்கிறார். இந்தப் பிட்ஸா பிரியர். பிட்ஸா தினமும் சாப்பிடுவதால் உங்கள் கொலஸ்ரோல் அளவு அதிகரிக்கவில்லையா என்று கேட்டுள்ளார்கள். பசிக்கும்போதுதானே பிட்ஸாவைச் சாப்பிடுகிறேன். எனக்குக் கொலாஸ்ரோல் பிரச்சினை இல்லை என்கிறார் இந்த அமெரிக்கர்!

எங்கள் 80 வயதுப் பாட்டி, பிறந்ததிலிருந்து சோறு சாப்பிடுகிறாரே. அதைச் சாதனை என்கிறீர்களா? சோறு வேறு பிட்ஸா வேறு என்பதைச் சொல்லித் தெரிவிக்க வேண்டியதில்லை.

# நேரம் சொல்லாத கடிகாரம்



ஒரு கடிகாரம் செய்ய எவ்வளவு நேரம் ஆகும்? இந்தக் கடிகாரம் செய்ய 45 ஆண்டுகளானது. அப்பா தொடங்கிய வேலையை மகன் முடித்திருக்கிறார். இது நடந்தது 1827 இல்.

தங்கத்தாலான இந்தக் கடிகாரம் பிரான்ஸ் நாட்டு ராணி மேரி அன்ரனிற்றாவுக்கு பரிசளிக்க பிரத்தியேகமாக அவரின் அபிமானி ஒருவரால் தயாரிக்கப்பட்டது.

கொடுமை என்னவென்றால், இது தயாராகும் முன்பே ராணிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதன் பின் ஜெருசலேமிலுள்ள ஒரு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டு, அங்கிருந்து 1983 இல் திருடப்பட்டு, டிசம்பர் 2007 இல் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது. யாருக்கும் நேரம் சொல்லாமல் இன்று சும்மாவே உறங்கிக் கொண்டிருக்கிறது இந்த 30 மில்லியன் டொலர் கடிகாரம்.

கோடிகள் கோழித் தூக்கம் போடுகின்றனவோ?

# பணக்காரப் பிச்சைக்காரி

இருந்தும் இல்லாமை என்ற நிலை பற்றித் தெரியுமா? நல்லதொரு உதாரணமாகத் திகழ்கின்ற, ஒரு 79வயது சீன மூதாட்டிதான், புதினப் பூங்காவின் இந்த வார நட்சத்திர நாயகி. 5 மாடி வீடு, பல விற்பனை நிலையங்கள், வாடகை வீடுகள் என்று ஏராளமான அசையாச் சொத்துக்களுக்கு சொந்தக்காரியான இவர், தன் வாழ்நாளில் பெரும்பகுதியை ரயில் நிலையங்களில் கையேந்தும் பிச்சைக்காரியாகக் கழித்திருக்கிறார் என்பது அதிர்ச்சியான தகவல்தான்.

"நாங்கள் வசதியாக வாழும் ஒரு பணக்காரக் குடும்பம். எப்படிச் சொல்லியும் அம்மாவைத் தடுக்க முடியவில்லை" என்று மகன் செய்த முறைப்பாடுதான், இந்த பணக்காரப் பிச்சைக்காரியை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது. தாயிடம் பல வங்கிகளில் தாராளமான சேமிப்பு இருக்கின்றது. முழுநாளும்அவரோடு இருந்து கவனிக்க முடியாவிட்டாலும், வீட்டில் நிற்கும்போது நன்றாகவே கவனித்து வருகிறோம். ஆனால் பிச்சையெடுப்பதை விட மறுக்கிறா அம்மா" என்கிறார் மகன்.

தாயின் கதையோ நேர்மாறாக இருக்கின்றது. நான் பிச்சையெடுத்து பணத்தைச் சேமித்து வருகிறேன். என் இயலாமைக் காலத்தில், முதியோர் இல்லமொன்றில் தங்க இந்தப் பணம் உதவும் என்கிறார் தாய்.

குழப்புகிறார்களே? அப்படியானால் வங்கிக் கணக்குகளில் இருக்கும் பணம் யாருக்குச் சொந்தம்?

ஏன் இந்தப் "பிச்சைக் காசு" என்று நினைக்கிறாரோ அம்மா?



# விலைமதிப்பான அலைபேசி



உலகின் விலையுயர்ந்த அலைபேசி, அப்பிள் தானே என்கிறீர்களா? உண்மைதான். ஆனால், இந்த அலைபேசி (Falcon Supernova iPhone 6 Pink Diamond) அதிலும் ஸ்பெஷல். 24 கரட் தங்கம், வைரம் என நகைக்கடையே இதன் உள்ளே உண்டு. விலை, 48.5 மில்லியன் டொலர்கள்.

விசேடமாக பணத்தில் குளிக்கும் இந்த வர்த்தகப் பிரமுகருக்காகத் தயாரிக்கப்பட்டது இவ்வளவு விலையுயர்ந்த அலைபேசியை வைத்திருப்பவரை அம்பானி என்றுதானே சொல்ல வேண்டும்? இந்தஅலைபேசியை வைத்திருப்பவரும் ஒரு வகையில் அம்பானிதான். மும்பை இந்தியன்ஸ் கிரிக்கெட் கழகச் சொந்தக்காரியை ஞாபகம் இருக்கின்றதா? அம்பானியின் மனைவி நீதா அம்பானி முகேஷ் கையில்தான் இந்த அலைபேசி இருக்கின்றது.

பணம் படுத்தும் பாடு!

# வண்ணத்துப்பூச்சியும் வக்ர அரசியலும்

"கடந்த கால யுத்த நிலைமையை விட தற்போதைய நிலைமை மிக மோசமானது" - என அல்ஜீரியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஐ.நா. இராஜதந்திரியுமான லக்தர் பிரஹிமி தெரிவித்துள்ளார். நெல்சன் மண்டேலாவால் நிறுவப்பட்ட சமாதானம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் செயற்படும் 'த எல்டர்ஸ்' அமைப்பினூடாக விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எவ்விதநோக்கமும் இல்லாது - மக்கள் நலனையோ அல்லது ஜனநாயகத்தின் மகிமையையோ எள்ளளவும் கவனத்திற் கொள்ளாது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த முடிவு எடுத்திருப்பது மிகவும் அபாயகரமானது என உலக நாடுகளைச் சேர்ந்த பல ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர். மைத்திரிபால சிறிசேன நாட்டின் தலைவர் என்ற பதவியை வகிக்க அருகதையற்றவர் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார் எனப் பலர் சமூகவலைத்தளங்களில் செய்திகளாகப் பரவவிட்டிருக்கின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மஹிந்த தரப்பினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட பொதுக் கூட்டமொன்றில் பேசிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன "தான் ஒரு பொதுவானவர் அல்ல" என்றதை மீண்டும் நிரூபித்திருப்பதாகவே அரசியல் வட்டாரங்களிலும், தனிமனித உரையாடல்களிலும் பேசப்படுகிறது. அவருக்கெதிராகக் காரசாரமான கருத்துக்களை இலங்கைப் பிரஜைகள் முன்வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த நவம்பர் 7 அன்று கொழும்பு ரெலிகிராப் என்ற இணைய இதழ் "இன் த ரைம் ஒவ் பட்ட பிளைஸ்" என்ற தலைப்பில் சரத் டி அல்விஸ் எழுதிய கட்டுரையை வெளியிட்டிருக்கிறது.

In The Time Of The Butterflies - By Sarath de Alwis (Colombo Telegraph)

There are times when we are powerless to prevent injustice. There must never be a time when we fail to protest. At yesterday's rally President Sirisena made a declaration that the whole world heard. Some politicians are ready to dive in to abysmal depths of depravity for political expediency while some still hold on to old world graces of minimal civility.

Former President Mahinda Rajapaksa who was on the stage, on hearing the butterfly remark put his head down, holding it with one hand and mimicked a mock laugh. In sickening contrast, a highly amused Dinesh Gunewardena emitted a bovine belly laugh that encouraged the slayer to stab



deeper.

"In the time of the butterflies" is a novel by Latin American novelist Julia Alvarez.

ஓரினச் சேர்க்கையை மட்டுமல்ல ஓரினத் திருமணத்தையும் சில உலக நாடுகள் தற்போது சட்டமாக்கி உள்ளதையும், சட்டமாக்க உரையாடிக் கொண்டிருப்பதையும் மனதிற் கொண்டே அவர் தனது கருத்தை வெளியிட்டிருக்க வேண்டும். அப்படி அவர் செய்யவில்லை. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் என்று ஒரு சமூகம் இலங்கையில் முளைவிட்டிருப்பதுவும் அவர்கள் தமது மத்தியில் இது பற்றிய உரையாடல்களைத் தொடங்கியிருப்பதையும் செய்திகளினூடாகவும், பல நேர்முகங்களினூடாகவும் அறிந்து வருகிறோம். இப்படிப்பட்ட நிலையிலேயே அதுபற்றி எள்ளி நகையாடியிருக்கிறார் ஜனாதிபதி.

முன்னாள் பிரதமர் ரணிலைத் தாழ்த்திவிட வேண்டும் என்ற எண்ணத்துக்கு முன்னால் மைத்திரிபால சிறிசேன தான் ஒரு பொறுப்புள்ளவர் என்பதையும், பொது மனிதன் என்ற பதவியை வகுப்பதையும் மறந்து விட்டது ஏனோ தெரியவில்லை? ஜனாதிபதி, ரணிலைச் சொன்னதைப்போல ஜனாதிபதி அவர் தான் பற்றிய எத்தனை அந்தரங்கங்களை மக்களுக்குத் தெரியாமல் மறைத்து வைத்திருக்கிறார்? காந்தி சத்திய சோதனையில் தன்னைப் பற்றிச் சொன்னதைப்போல ஜனாதிபதியும் சொல்லிவிட்டு ரணில் பற்றிய கருத்தை முன் வைக்கட்டும். மக்கள் சிலவேளைகளில் ஏற்றுக் கொள்வார்கள். அதுவும் சந்தேகமே? அது பற்றி ரணில் பேசுவாரா?

• • •

ஜனாதிபதியின் உரை பற்றி முகநூல் குறிப்பொன்று இவ்வாறு பேசுகிறது

மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க - மகிந்த ராஜபக்ச மூவரும் எத்தகைய போலிகள் என்பது அனைவருக்கும் தெரியும். ஒருவரை ஒருவர் விமர்சிப்பதும் மீண்டும் பாராட்டுகளை பகிர்வதும் வழக்கமான விடயம். மைத்திரிபால சிறிசேன, ரணிலை விமர்சிக்க ஓரினச்சேர்க்கை பற்றி பேசியுள்ளார். ஒரு பொது மேடையில் நகைப்புக்குரிய விடயமாக ஒருவரது பாலியல் நிலைப்பாட்டையும் அந்த சமூகத்தையும் பரிகசிப்பது போல பேசியமை கண்டனத்துக்குரியது. இந்த சமூகத்தில் அனைவரும் சமமானவர்கள் என்பதை ஜனாதிபதி கருத்திற்கொள்ளவில்லை.

இலங்கையில் பெரும்பாலான மக்கள் பாரம்பரியம், கலாசாரம், என்ற வட்டத்திற்குள் வாழ்பவர்கள். சிந்தனைவாத மாற்றங்களை ஏற்படுத்தாது ஒழுக்க நிலை வாதங்களை தமது வசதிக்கேற்ப முன்வைத்து பேசுவது வழக்கம். பல மனிதர்களின் மனநிலையும் மைத்திரிபால சிறிசேன மனநிலையும் ஒன்றுதான். பெரும்பாலும் சகல இனத்திலும் இவ்வாறு தானிருக்கிறது. ஓரினச்சேர்க்கையை தமிழ் தரப்பு கலாச்சார சீர்கேடாகவும் முஸ்லிம் தரப்பு இறைவனின் படைப்புக்கு எதிரானதாகவும் கூறுகின்றன.

நம் சமூகத்தில் ஓரினச்சேர்க்கை பற்றிய புரிதல் உருவாக நீண்ட காலமெடுக்கும். புரிதலற்றுப் பேசுபவர்களுக்கெதிராக கண்டனங்களை பதிவு செய்வது அவசியம். மேடையிலும் கூட்டத்திலும் சிரித்தவர்கள் ,

சிங்கம் போன்ற விலங்குடனான பாலியல் தொடர்பை வரலாற்று பெருமையாக கருதிவிட்டு ஓரினச்சேர்க்கை பற்றி பரிகாசம் செய்யும் நிலையைச் சற்று கவனிக்கவும்.

• • •

அது பற்றி தமிழ் சீஎன்என் இணைத்தில் இவ்வாறு ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் நேற்று நடந்த பேரணியில் ரணில் விக்கிரமசிங்கவை பாலியல் அர்த்தத்துடனான சொல்லை பயன்படுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வர்ணித்துள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சிறிசேன தனது நேற்றைய உரையில் ரணில் விக்கிரமசிங்கவின் மேற்பார்வையின் வண்ணாத்துப்பூச்சிகள் கும்பலொன்று நாட்டை ஆட்சி செய்தது என குறிப்பிட்டுள்ளார்.

வண்ணாத்துப்பூச்சிகள் ஆட்சியை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என தெரிவித்துள்ள சிறிசேன சிரேஷ்ட அமைச்சர்கள் எந்த முக்கிய முடிவையும் எடுக்கவில்லை மாறாக ரணிலும் அவரது வண்ணாத்துப்பூச்சிகள் கும்பலுமே அனைத்து முடிவுகளையும் எடுத்தனர் என சிறிசேன தெரிவித்துள்ளார். சிறிசேனவின் இந்த உரைக்கு கடும் விமர்சனங்கள் எழத்தொடங்கியுள்ளன.

சிறிசேன வண்ணாத்துப்பூச்சிகள் என்ற சொல்லை பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவை ஓரினச்சேர்க்கையாளர் என குறிப்பிட்டுள்ளார் என தெரிவித்துள்ள மனித உரிமை ஆர்வலர் சுனந்த தேசப்பிரிய வண்ணத்துப்பூச்சி என சிங்களத்தில் ஓரினச் சேர்க்கையாளர்களை இழிவாக குறிப்பிடுவது வழமை என தெரிவித்துள்ளார். "சிறிசேன இதற்காக நீங்கள் வெட்கப்பட வேண்டும்" - எனவும் சுனந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

அதைத் தொடர்ந்து மங்கள சமரவீர...

அட்டைபோன்று இருந்து கொண்டு மனித இரத்தத்தைக் குடிப்பதைவிட வண்ணத்துப்பூச்சிகள் உலகம் மேலானது -என்றொரு கருத்தையும் சொல்லி இருக்கிறார். அரசியல்வாதியாக இருக்கட்டும், சமயவாதியாக இருக்கட்டும், பொதுமேடைப் பேச்சாளராக இருக்கட்டும், அவர் எவராக இருக்கட்டும் பொது மேடைகளுக்குரிய நாகரீகத்தைப் பின்பற்றாதவரை அவர்கள் பொதுமக்களுக்குரிய தலைவர்களாக இருக்க முடியாது. அவர் தன்போன்ற ஒரு மேடை நாகரிகமற்ற குழுவுக்கு வேண்டுமானால் தலைவராக இருக்கலாம். •

# நரகாசூரன்கள் கொண்டாடிய தீபாவளித் திருநாள்

அபிஷேகா

யாழ். போதனா வைத்தியசாலையில் 1987 ஒக்ரோபர் 21 அன்று இந்திய இராணுவம் நடத்திய கோரவெறித் தாக்குதலில் 21 வைத்தியசாலைப் பணியாளர்கள் உட்பட 68 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்தை நேரில் பார்த்தவர் - பாதிக்கப்பட்டவர் கீற்று இணையத்தில் எழுதிய கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.

(கடந்த வாரத் தொடர்ச்சி)

அடுத்தது என்ன நடக்குமோ! கொல்லப்பட்டுவிடுவோமா! என்ற அச்சம் ஒன்றுசேர, ஒருவரையொருவர் நிசப்தமற்றுப் பார்த்துக் கொண்டிருந்தோம். நான் தலையை சற்று உயர்த்தி அம்மாவின் கண்களைப் உற்றுப் பார்த்தேன். அம்மா தம்பியை கட்டிப்பிடித்துக்கொண்டு ஒரு வாங்கிற்கு கீழே அசை வற்றுப் படுத்திருந்தார். என்னைப்பார்த்ததும் சிறு நிம்மதி அவரின் முகத்தில் தெரிந்ததுடன் உதட்டசைவில் கவனம் என சொன்னார். அதையும் தாண்டி, ஏக்கம், பயம் கலந்த பரிதவிப்பு அவரின் முகத்தில் தெரிந்தது. கொரிடோரில் கொல்லப்பட்டிருந்த பிணங்களைக் கடந்து இராணுவம் வரவில்லை. அதனால் பின்னால் இருந்தவர்கள் உயிர்தப்பியிருந்தனர்.

மேல் தளத்தில் இந்தியப் படையினர் கதைக்கும் சத்தங்களும் சிரிப்பொலிகளும் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருந் தன. பத்து மணியளவில் இந்திய இராணுவத்திற்கும் சிலருக்குமிடையில் சம்பாசணை நடைபெறுவதை கேட்க முடிந்தது. இங்கு நோயாளர்களும் ஊழியர்களும் மட்டுமே இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் பொதுமக்கள் என ஆங்கிலத்தில் தெளிவுபடுத்தப்படுகின்றது. மனதுக்குள் ஒரு சிறுதுளி நம்பிக்கைக் கீற்று. நாங்கள் காப்பாற்றப்படலாம். யாரோ எங்களுக்காக கதைக்கின்றனர் என்ற நினைப்பு சிறு தெம்பைத் தர, சற்று தலையைத் தூக்கிப்பார்த்துக் கொண்டிருந்தபோது வைத்தியசாலைச் சீருடையுடன் நால்வர், இந்திய இராணுவச் சிப்பாய்களிடம் யாராவது உயிருடன் எஞ்சியிருந்தால் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கையில் கதைத்துக் கொண்டிருப்பதாக புரிந்து கொண்டேன். அப்போது இராணுவத்தினர் ஆயுதங்களின்றியே (ஏறக்குறைய எல்லோரும் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்ற நினைந்திருந்தனர் போலும்) கதைத்துக் கொண்டிருந்தனர்.

திடீரென ஒரு சீக்கிய இராணுவத்தினன் மேல்மாடிக்குச் ஓடிச்சென்றான். திரும்பி வந்தவன் கையில் துப்பாக்கி. வந்த வேகத்தில் அவர்களை நோக்கிச் சுடத்தொடங்கினான். முதலில் தாதி இரண்டாவதாக வைத்தியர் பின்னர் மற்றைய தாதி தொடர்ந்து மற்றைய ஊழியர் என வரிசையாகச் சுட்டான். வைத்தியர் சூடுபட்டு விழும் போது முருகா என்ற சத்தத்துடன் விழுந்து இறந்தார். அந்தச் சம்பவம் எமக்கு ஏற்பட்ட சிறு நம்பிக்கையை மட்டுமல்ல அவர்களின் உயிரையும் சேர்த்துப்பறித்தது. மக்களுக்காக கெஞ்சிக் கொண்டிருந்த அவர்களது உடல்கள் 'தொப்' என்று விழுந்து இரத்தத்தில் குளித்தன. அங்கு அசைவின்றிப் படுத்திருந்த மக்களின் வற்றிய கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள் வடிந்தன. அதில் சூடுபட்ட ஒருவர் பஞ்சபுராணமும் சிவபுராணமும் பாடியபடியே கிட்டத்தட்ட ஒன்றரை மணித்தியாலங்களின் பின் இறந்துபோனார்.

தப்பியிருந்த மக்களின் முகங்களில் ஏற்பட்ட சிறு நம்பிக்கையும் தகர்ந்தது. நாம் ஏன் கொல்லப்படுகின்றோம் என்று புரியவில்லை. கொல்லப்பட்டவர்கள் நோயாளிகளும் வைத்தியசாலை ஊழியர்களும் என்பதை உறுதிப்படுத்துவதில் யாருக்கும் சிரமம் இருக்காது. தொடர்ந்து இன்று வைத்தியசாலையின் இன்னுமொரு பக்கத்திலிருந்து வந்த வைத்தியர் மற்றும் தாதியர்கள் படுகொலை நடந்த இடத்திற்கு வந்து காப்பாற்ற முற்பட்டபோதும் ஏன் சுடப்பட்டார்கள் என்பது புரியவில்லை. தொடர்ந்து என்ன நடக்கப்போகுதோ! என் நண்பனின் பார்வையில் இருந்து புரியமுடிந்தது. தாய் தந்தையரை விட்டு அவனையும் கூட்டிவந்தது தவறோ? என மனம் எண்ணியது. காயப்பட்டவர்கள் தங்களின் வேதனைகளையும் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாகக் கிடந்தனர். அடுத்தகணம் என்ன நடக்கப்போகின்றது எனத் தெரியாமல் அப்படியே அசைவற்று பேச்சற்றுப் பிணங்களைப்போல படுத்திருந்தோம். மதியத்தைத் தாண்டியும் அங்கு எந்த மாற்றமும் இல்லை. அப்படியே இருந்தோம்.

மாலைவேளையில் ஒரு பெண்ணின் அழுகுரல் சத்தம் கேட்டது. இங்கு நோயாளர்களும் வைத்தியர்களும் வைத்தியசாலை ஊழியர்களும்தான் இருக்கிறார்கள் எனக்கூறி கதறி அழுதது அந்தப் பெண்குரல்.



தொடர்ந்து இராணுவத்தினர் கதைக்கும் சத்தமும் கேட்டது. நம்பிக்கையின்றி, எங்களுக்காக இருன்னுமொரு உயிரா! என எண்ணிக்கொண்டிருந்த வேளை, அப்பெண், அவர் ஒரு வைத்தியர், அழுகையுடன் "தப்பியிருப்பவர்கள் கையை உயர்த்திக்கொண்டு வெளியில் வாங்கோ" எனச் சொன்னார். என்ன செய்வதென்று புரியவில்லை. மருத்துவர் பொன்னம்பலம் அவர்கள் உட்பட பல வைத்தியர்களும் அந்த அறையில் இருந்தனர். அடுத்து என்ன நடக்கப் போகின்றது எனத் தெரியாமல் எழும்பி நடக்கத் தொடங்கினார்கள்.

நானும் கைகளை உயர்த்திக் கொண்டு பார்க்க, அந்தக் கொறிடோரில் இறந்த உடல்கள் இங்குமிங்குமாகக் கிடந்தன. ஒருவருக்கு மேல் ஒருவர் வீழ்ந்து கிடந்தனர். கால்வைத்து நடக்க இடமில்லை, இரத்தம் உறைந்து சேறு போல இருந்தது. இறந்தவர்களின் உடல்கள் வீங்கியிருந்தன. அம்மாவும் தம்பியும் எழுந்து கையை உயர்த்திக் கொண்டு நின்றனர். முன்பக்கம், மேல்மாடிப் படிகளுக்கு அருகில் கிடந்த பிணங்களுக்கிடையில் வைக்கப்பட்டிருந்த பரலின்மேல் கொக்கோகோலாக் கேஸ் ஒன்று இருந்தது. அதற்கு அருகில் சீக்கியச் சிப்பாய் துப்பாக்கியை உயர்த்தியபடி நின்றான். சோடா குடிச்சுக்குடிச்சுத்தான் எல்லோரையும் இரவிரவா சுட்டிருக்கிறானா! என நினைத்தேன்.

இரத்த வெள்ளத்தில் படுத்திருந்திருந்த பிரியா பலவீனமான குரலில் கூப்பிட்டார். அவரை நோக்கி அடி எடுத்து வைக்க முன்னர், துப்பாக்கியை நேரே பிடித்தபடி நின்ற இந்திய சீக்கியப்படையினன் நட என அதட்ட, கண்களினால் ஆற்றாமையையும் பயத்தையும் வெளிப்படுத்தி எந்த நம்பிக்கையுமற்று எல்லோருடனும் கையை உயர்த்திக் கொண்டு நடக்கத் தொடங்கினேன். அங்கு கிடந்த உடல்களுக்கு இடையில் இருந்த இடைவெளிகளில் காலை வைத்தபோது உறைந்த இரத்தம் கணுக்கால் வரை தொட்டு நின்றது. அடிப்பாதத்தில் உடைந்த எலும்புகளும் தசைகளும் மிதிபட்டது போன்ற உணர்வு. மிக மோசமான இரத்தவாடை. அப்படியே பார்த்துப்பார்த்து நடந்து சென்றோம்.

கொறிடோரின் வாசலில் வைத்திய நிபுணர் சிவபாதசுந்தரம், அருகில் கிடந்த தாதிகளின் உடலைப் பார்த்தபோது, காலையில் எங்களைக் காப்பாற்ற வந்து இறந்தவர்கள் இவர்கள்தான் என்பதைப் புரிந்து கொண்டேன். மேலும் பல உடல்களும் அந்தப்பகுதியை நிறைத்திருந்தன. நோயாளார் வண்டியில் படுத்திருந்த நோயாளர்கள் அந்த வண்டிகளிலேயே கொல்லப்பட்டுக் கிடந்தனர். விழுந்து சாமி கும்பிடுவதைப்போல பலர் கும்பிட்டபடியே இறந்திருந்தனர். நோயாளர் வண்டி ஒன்றில் தனது குழந்தையைக் கிடத்தியிருந்த தாய் அந்தக் குழந்தையை கட்டிப்பிடித்தபடியே இறந்து போய் கிடந்தார். மகளைத் தனது உடலுக்கு அடியில் மறைத்துக் கட்டிப்பிடித்தபடி இறந்திருந்த தகப்பன் என ஆங்காங்கு சுடப்பட்டு இறந்திருந்த உடல்கள், திகிலடைய வைக்கும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு, அம்மாவும் நானும் மூன்றாவது தம்பியும் நண்பனுமாக இருபத்தி ஆறாவது வாட்டிற்குள் வந்து சேர்ந்தோம்.

(அடுத்த வாரமும் வரும்)

## யௌவனம்...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவள் இவனது கால்களைச் சீண்டி விளையாடிக்கொண்டிருந் தாள். மெதுவாக விழி உயர்த்தி அவளைப் பார்த்தான். அவள் எங்கோ சிந்தனையில் இருப்பவள் போல காணப்பட்டாள்.

இரவின் நீட்சியில் இயற்கை அவர்கள் இருவரையும் வென்றது.

வெளியே இருள் விலகத் தொடங்கியிருந்தது. புகையிரதம் மாகோ, அனுராதபுரம் போன்ற இடங்களைத் தாண்டி மதவாச்சியை எட்டிப் பிடிக்க ஓடிக்கொண்டிருந்தது. ஜன்னல் சட்டங்களிற்குள்ளால் செந்நிற ஒளி உள்ளே கசியத் தொடங்கியது. அவள் சட்டங்களை மீண்டும் மேல் உயர்த்தினாள். தக தகத்த செந்நிறச் சூரியன் வானத்தை மெல்ல எட்டிப் பார்த்தான். அவள் முகம் ஒளியில் சிவந்து ஒரு சௌந்தர்ய தேவதை போலக் காட்சி தந்தது. குருவிகளின் கீச்சிட்ட சத்தம் உள்ளே வந்து காதை எட்டியது.

அவள் ஒரு கையில் பிள்ளையை அணைத்தபடி மறுகையை புகையிரதத்திற்கு வெளியே தொங்க விட்டாள். இவனும் தனது கையை வெளியே நீட்டினான். குளிர்ந்த காற்று இருவரது கைகளையும் வருடிச் சென்றது. இவன் சட்டென்று அவளது கரத்தைப் பற்றிக் கொண்டான். இருவருது கைகளும் ஒன்றையொன்று தழுவின. உணர்வின் வெப்பம் உடல்களை ஊடுருவின. இரண்டு குளிர்ந்த கால்கள் இவன் முழங்காலை முறுக்கின. திடீரென ஏதோ நினைத்தவாறு அவள் தன் கையை உள்ளே எடுத்துக் கொண்டாள்.

இந்தப் பயணம் இனி எதில் போய் முடியும்?

அருகே இருந்தவர்கள் மெல்ல விழிப்படையத் தொடங்கினார்கள். ஒரு சிலர் தாம் கொண்டுவந்திருந்த பொதிகளை மேலிருந்து இறக்கத் தொடங்கினார்கள்.

ஈரப்பெரியகுளத்தில் ஒரு சில இராணுவவீரர்கள் புகையிரதத்தினுள் ஏறிக்கொண்டார்கள். அவள் ஊர் போய்ச் சேரும் வரைக்கும் - இவன்தான் அவளுக்கு 'கார்டியன்'. அவளது தூக்கியடிக்கும் அங்க அசைவுகளில் சொக்கி, மீண்டும் மீண்டும் அவளைச் சீண்டினான். அவள் ஒன்றுமே நடவாதது போல தன்னைக் காட்டிக் கொள்ள முயன்றாள்.

இவனது தொடர்ந்த செய்கைகள் அவளிற்கு இப்போது கோபத்தையும் எரிச்சலையும் ஊட்டியது. உணர்ச்சியற்ற ஜடம் போல இருந்த அவளது உடல் எதனாலோ ஒருமுறை குலுங்கியது. கண்களில் நீர் திரண்டது. வெறுப்பைக் கக்கும் விழிகளால் இவனை உற்றுப் பார்த்தாள். 'தூ' என்று காறி உமிழ்ந்து ஜன்னலிற்கு வெளியே துப்பினாள். 'இனி என்னைத் தொடாமல் இரு' என்ற எச்சரிக்கையுடன் எச்சில் நிலத்திலே விழுந்தது.

ஒரு சிறங்கை எச்சிலால் இந்த மனித மனங்களை அடக்க முடியுமா?

இவன் திடீரென்று அதிர்ச்சிக்குள்ளானான். அவளது அந்த அதிர்ச்சி வைத்தியம் - இவனது அவயவங்களை உள்ளிளுத்து ஒடுங்கச் செய்தது. இதுவரையும் அப்படி நடந்து கொண்டவள் திடீரென்று ஏன் இப்படி மாற வேண்டும்? ஏமாற்றம் கொண்டான். அவளின் அந்தச் செய்கையானது - வடபகுதியின் எல்லைவரை தொட்டு வந்த யாழ்தேவி, வவனியா வரை தனது சேவையை நிறுத்தியது போல இருந்தது.

புகையிரதம் வவனியாவில் தரிப்பதற்கு முன்பதாகவே அவசர அவசரமாக இருக்கையைவிட்டு எழுந்து கொண்டாள் அவள். 'பாக்'கை தோளிலே மாட்டிக் கொண்டாள். பையனைத் தூ க்கி இடுப்பிலே இருத்திக் கொண்டாள். விழுந்துவிடுமாப் போல் தள்ளாடி நடந்து கதவருகே போய் நின்றுகொண்டாள். இவனிடமிருந்து எவ்வளவு விரைவாக தப்பித்துக் கொள்ளலாம் என்பதில் அவள் கவனம் இருந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் இறங்கி சனங்களின் மத்தியில் கலந்துகொண்டாள்.

இவன் விரைவாகப் புகையிரதத்திலிருந்து குதித்து அவளை அங்குமிங்கும் தேடினான். அப்பொழுது அவள் ஸ்ரேசனின் உட்புறமிருந்து வெளியேறிக் கொண்டிருந்தாள். இவன் விரைவாக நடந்து ஸ்ரேசன் வளவிற்குள் நின்ற அரசமரத்தின் பின்னால் ஒதுங்கினான். முன்னே விரிந்து சென்ற பாதை வழியே நடந்து கொண்டிருந்த அவள் - ஒரு தடவை நின்று தன்னை யாராவது பின் தொடருகின்றார்களா எனப் பார்த்துவிட்டு நடக்கத் தொடங்கினாள்.

'பாரடா தம்பி! உதிலை போறது அகிலாதானே?' அரசமரத்தின் வேரிலே குந்தியிருந்த வயது போன ஒரு முதியவர், தனக்குப் பக்கத்திலே நின்ற சைக்கிள்காரப் பெடியனிடம் கேட்டார்.

'ஓம் அப்பு!' என்றான் அவன்.

இவன் முதியவருக்குப் பக்கத்தில் வந்து, 'ஐயா! உங்களுக்கு அந்தப் பெண்ணைத் தெரியுமா?' என்றான்.

முதியவர் இவனை மேலும் கீழும் பார்த்துவிட்டு,

'பாவமடா பெடிச்சி! இப்ப நாலைஞ்சு வரிசமா பிள்ளையோடை புருஷனைத் தேடி, கொழும்பு அங்கை இஞ்சையெண்டு அலையுறாள். கொழும்புக்குப் போன இடத்திலை வெள்ளை வானிலை வந்தவங்கள் பிடிச்சவங்கள். இன்னமும் வச்சிருக்கிறான்களோ அல்லது சுட்டுப் போட்டான்களோ ஆருக்குத் தெரியும்! ஒரு சோலி சுரட்டுக்கும் போகாத அப்பாவி அவன்' என்றார்.

பின் ஏதோ எண்ணம் கொண்டு, 'அவளுக்கு அவள் புருஷன் - வாழ்க்கையிலை ஒரு மின்னலைப் போல' என்றார்.

முதியவரின் பேச்சில் இவன் திகைத்துப் போனான். ஒருவேளை புகையிரதத்தினுள் நடந்தது கூட அவளின் ஒரு 'தற்காப்பு' முயற்சியோ என்று இவனை சிந்திக்க வைத்தது.

அவள் போன வழியே - ஆனால் சற்றுத் தாமதித்து - இவனும் நடக்கலானான். அவள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு பாதச்சுவடும் இவன் நெஞ்சை அழுத்தியது. தம்மைத்தாமே எல்லா வகையிலும் மேம்பட்டவர்களாகக் காட்டிக்கொள்ளும் இந்த உலகத்தில் - மன்னிப்புக் கேட்கும் திராணியற்று - அவளின் பின்னாலே நடந்து கொண்டிருந்தான். அவளது இடுப்பிலே தொங்கிய பையனின் கால்கள் இவனது மனத்தைப் போல இருபுறமும் ஆடிக்கொண்டிருந்தன.

அடுத்து வந்த சந்தியில் அவள் மேற்குப் புறமாகவும் - இவன் கிழக்குப் புறமாகவும் பிரிந்து சென்றார்கள். •

---

## நூல் அறிமுகம்:

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற வரியில் வரும் காத்தநகர் என்பது ஆரையம்பதியைக் குறிப் பதனால் இது காத்தான் என்ற வேடன் வாழ்ந்திருந்த கால மான 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திற்கும் 1872 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தினுள் பாடப்பட்டிருக்க லாம் எனக்கருதப்படுகின்றது. எனவே 18 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே ஆரையம்பதியில் கண்ணகை வழிபாடு சிறப்புற்று இருந்திருக்க வேண்டும் என்பதை ஊகிக்க முடிகின்றது.

அணிந்துரையில் பாலசுகுமார் 'கிழக்கு மாகாணத்தின் வரலாற்றில் மிகச்சாதுரியமாக முக்கியத்துவம் மறைக்கப்பட்ட குருகுலம், வர்ணகுலம் மீகாமன் பரம்பரை பற்றிய செய்திகளையும் மட்டக்களப்பில் இவர்களது வரலாற்று முக்கியத்துவம் என்ன என்பதற்கான வழிகளையும் இந்நூல் திறந்து விட்டுள்ளதோடு மட்டக்களப்பின் வரலாறு முழுமையாக எழுதப்படுகின்றபோது ஆரையம்பதி கண்ணகி பற்றிய ஐதீகங்களும் நம்பிக்கைகளும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகின்றது' எனக்குறிப்பிட்டுள்ளமை இந்நூலின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

தமிழர்களின் வரலாறுகள் இருட்டடிக்கப் பட்டும் திரிபுபடுத்தப்பட்டும் வரும் சூழலில் அவற்றின் உண்மைத்தன்மையை காய்தல் உவத்தலற்று வெளிப்படுத்துவது காலத்தின் தேவையாக உள்ளது. அத்தகையதொரு பணியை ஆரையம்பதி கண்ணகி அம்மன் குறித்து மேற்கொண்ட இந்நூ லின் தொகுப்பாசிரியர்களான க.சபாரத்தினம் மற்றும் சொ.பிரசாத் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். மறுகா வெளியீடாக இந்த நூல் வெளிவந்துள்ளது.

---

## அ.முத்துலிங்கத்தின்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாய்குழறியது. அப்படியே ஓடிவந்து எங்களைக் கட்டிக் கொண்டார். 'என்ரைபிள்ளைகள், என்ரை பிள்ளைகள்' என்று வாய்ஓயாமல் பிதற்றிக்கொண்டு எங்கள் ஒவ்வொருவருடைய அங்கங்களையும் தடவிப்பார்த்து அவை அந்தந்த இடங்களில் இருக்கின்றனவா என்று உறுதி செய்து கொண்டார். அம்மா தைரியமானவர் இப்படியான அற்பவிசயங்களுக்கெல்லாம் கலங்காதவர். ஆனால் அன்று யாரோ மூன்றுபிள்ளைகள் செத்துப்போனார்கள் என்று அம்மாவிடம் சொல்லிவிட்டார்கள் அம்மாவின் மனதில் அது நாங்கள்தான் என்பது தீர்மானமாகிவிட்டது."

இங்கு அம்மாவின் படிமம் அழகாக வார்க்கப்பட்டிருக்கிறது. கோயில் திருவிழா சனநெரிசலில் காணாமற் போன தங்களுக்காக அம்மாவின் கலக்கத்தையும் துன்பத்தையும் எடுத்துக்காட்டுவார்.

இதேபோல் ஒரு குக்கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் இருந்து பேச்சுப்போட்டிக்குச் சென்று பரிசில் கிடைக்காமல் திரும்பிவந்த நினைவுகளையும் எடுத்துக்காட்டுவார். அந்த வர்ணனை மனத்தில் ஒர் இருளாக மூடிக்கொள்வதையும் படிப்போர் உணர்வர்.

"வீடு இருட்டில் மூழ்கிக் கிடந்தது. எல்லோரும் தூங்கப் போய்விட்டார்கள் என்றே நினைத்தேன். ஒரேயொரு கைவிளக்கு எரிய அம்மா எனக்காகத் தூங்காமல் காத்திருந்தார். நான் ஒரு பெரிய ஆள், ஏதோ முக்கியமான காரியமாக வெளியே போய்விட்டுவருகிறேன் என்பது போல அம்மா எனக்காகக் கண்விழித்திருந்ததை இன்றுவரைக்கும் என்னால் மறக்கமுடியாது. என்னைக் கண்டதும் அம்மா கட்டி அணைத்து, தலையைத் தடவி ஈரம் இல்லையென்று உறுதி செய்தபிறகு 'பிள்ளை உனக்கு நல்ல பசி.வா, நான்சாப்பாடுபோடுறேன்' என்றார். அன்றைய பேச்சுப்போட்டியில் என்ன நடந்தது என்றோ, நான் எப்படிப் பேசினேன் என்றோ, யாருக்குப் பரிசு கிடைத்தது என்றோ ஒருவார்த்தை அவர் என்னிடம் கேட்கவில்லை. கையிலே வெற்றிக்கிண்ணம் இல்லாததைப் பார்த்துவிட்டு என்னைக் கேள்விகேட்டு வேதனைப்படுத்தக்கூடாது என்று நினைத்திருக்கலாம்."

இங்கு கூட அம்மாவின் உண்மை அன்பு எடுத்துக்காட்டப்படுகிறது. ஈழத்தில் எஸ்.பொவுக்குப் பின்னர் மிகச்சிறந்த கதை சொல்லியாக முத்துலிங்கத்தை அடையாளப்படுத்த இதுபோன்ற எழுத்துநடையை அவர் பலகதைகளில் முத்திரையாகப் பதித்துள்ளார். •

# ஆரிட்டை சொல்லி அழ?

## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## இலட்சம் – இலட்சியம் கோடி – கொள்கை வருத்தம் நிச்சயம்



கொள்ளை இலட்சியம் எண்டால் என்ன? அது எங்கை வாங்கலாம்? குறைஞ்சது எத்தினை கிலோ வாங்க வேணும்? இதுதான் இப்பத்தே அரசியல் நிலமை. சனத்துக்காக நாங்கள் இருக்க வேணும். அவைதானே எங்களைத் தெரிவு செய்தவை. அவைக்குப் பிழை விடப்பிடாது எண்ட கரிசனை ஆரிட்டையேன் இருக்குதே?

அமெரிக்காவின்ரையும் ஐரோப்பாவின்ரையும் ஆசைக்குத் தங்களை அடைவு வைச்சவை ஒரு பக்கம். சீனாவோடை படுக்க வேணும் எண்ட விருப்பத்தோடை மற்றப் பக்கம். அவைக்காக அரசாங்கத்தை அமைக்க வேணும் எண்டு பாடுபட்டு அதுக்காக ஆக்களை விலை குடுத்து வாங்க வேணும் எண்டு என்ன மாதிரி ஏலம் போகுது? எட ஒரு லட்சம் இரண்டு லட்சம் எண்டதைவிட கோடியா வெல்லே கிடக்கு. இப்ப பாருங்கோ வியாழேந்திரன் ஒரு பக்கம் போய் நிக்கிது. கோடியா வாங்கிப் போட்டான் என்று சொல்லினமே ஒழிய எத்தினை எண்டு சரியா இன்னும் கணக்குத் தெரியாது. வியாழேந்திரனுக்குத் தன்ரை வீட்டுக் கோடி தெரியுமோ? தெரியாது. ஆனால் காசிலை கோடியைப் பாத்திட்டார். அப்ப ஆசை ஆரைவிட்டுது? கூட்டமைப்பு ஆளை விலத்தப்போகுதாம். அவை தனக்கு எதிர் எண்டு வழக்குப்போடப்போகுதாம். செய்யிறதையும் செய்துபோட்டுப் போய் வழக்கு வேறை. ஊத்தையைக் கழுவச் சேத்திலை குளிச்ச மாதிரி.

"தாவல் விளையாட்டெண்டது சொல்லி வேலை இல்லை" எண்டு கொழும்பிலை ஒரு ஆட்டோக்காரன் சொல்லிச் சிரிச்சான். படியாதவனும் சொல்லிச் சிரிக்கிற மாதிரிப் போட்டுது உந்தத் தாவல் வேலை. என்ன இப்ப கட்சிக் காரருக்குத் தெரியும் லட்சம் சபைக்குச் சரிவராது எண்டு. அதாலை தான் கோடி ஆக்கினவை. கோடியையும் ஒண்டு இரண்டு எண்டு வைக்கேல்லை. 20 -30 எண்டு றேற்றைக் கூட்டிப்போட்டினம். அடிச்ச அடி எண்டால் நெத்தி அடி. நினைக்க நேரம் குடுக்கேல்லை.

கோடிக்கு வாறன் எண்டு சொன்னதொண்டு வீட்டைப் போய்ச் சொல்லிச்சுதாம் கல்குலேட்டரைனக் கொண்டா எண்டு. கோடிக்கு எத்தினை சைவர் எண்டு பாக்கக் குத்தின குத்துதலிலை கல்குலேட்டர் அரண்டாப் போச்சுதாம். அத்தினை குத்தல்.கடைசியிலை பல கல்குலேட்டர் வாங்கியும் அன்னும் எத்தினை சைவர் எண்டு கண்டு பிடிக்கேல்லை எண்டதுதான் இப்ப உள்ள நிலமை.

அப்ப கோடியை வாங்கினது என்ன சனத்தைப் பாக்காப்போகுதே. சனம் என்னைச் செய்தாலும் என்ன? கவிண்டு கொட்டுண்டாலும் என்ன? ஆருக்குக் கவலை? ஆனால் அதுக்கை அவை தன்னை நம்பின ஆக்களையும் கைவிடேல்லை. கோடியோடை பதவியும் வாங்கினது ஏன் தெரியுமே? இன்னும் வாங்கின கோடியைப் பெருக்கவும், தன்னை நம்பினதுகளைக் கைவிடாமல் அது லட்சத்தையாவது பாக்கட்டும் எண்டுதான்.

அப்ப லட்சத்தைப் பாத்து இலட்சியத்தை விட்டவன்ரை கதையையும், கோடியைப் பாத்துக் கொள்கையைக் கோட்டை விட்டவன்ரை கதையையும் நாங்கள் ஆரிட்டைச் சொல்லி அழ?

**- கோளரங்கன்.**

# இப்படியும் ஓர் அஞ்சலி...

## காணாமல் போன ஒரு கம்பீரக் குரல்

கொலை செய்யப்பட்ட சவுதி அரேபியப் பத்திரிகையாளரான ஜமால் கஷோக்கி பற்றி வாஷிங்டன் போஸ்ட் தனது பதிப்பிலே இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது. அவருக்கு மரியாதை மற்றும் அஞ்சலி செலுத்தும்வகையில் அன்றைய தினம் அவர் வழமையாக எழுதும் பத்திக்குரிய இடத்தை வெற்றிடமாக விட்டு தனது பதிப்பை வெளியிட்டிருக்கிறது.

பத்திரிகையாளரான ஜமால் கஷோக்கிக்கு வயது 59. அவர் முன்னர் சவுதி அரேபியாவில் வெளியாகும் பத்திரிகை ஒன்றில் தொடர்ந்து பத்தி எழுதி வந்தவர். சவுதி அரேபிய அரசின் சிரேஸ்ட அதிகாரிகளுக்கு ஆலோசகராகவும் இருந்திருக்கிறார். சவுதி இளவரசரால் பல ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். இது தொடர்பான முரண்பாடு காரணமாக பத்தி நிறுத்தப்பட்டது. அதே வேளை அவர் அமெரிக்காவில் குடியேறிவிட்டார். அவர் அமெரிக்காவில் இருந்தவண்ணம் சவுதி பட்டத்து இளவரசரின் கொள்கைகளைப் பற்றி தனது டுவிட்டரில் பதிவிட்டுக் கொண்டிருந்தார். சவுதி அரச தமது இளவரசர் தொடர்பாக டுவிட்டரில் பதிவிடுவதை நிறுத்த வேண்டும் என வற்புறுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவர் நிறுத்தாது தொடர்ந்து பதிவிட்டுக் கொண்டிருந்தார். இதுவே அவரது கொலைக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.


Trump's bullying of Iran could backfire

Journalist Jamal Khashoggi, shown here at the World Economic Forum in Davos, Switzerland, in 2011, has not been seen since Tuesday.

A missing voice

BY JAMAL KHASHOGGI

Democrats, get mad. Then get even.

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 50

நன்றிதமிழ்லீடர் – அவுஸ்ரேலியா



அது 'ரணகோஷ' இராணுவ நடவடிக்கை, இராணுவம் வெகு மூர்க்கமாக முன்னேறிக்கொண்டிருக்கும் காலம். பெரும் எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்ட 'ஜெயசிக்குறு' நடவடிக்கை முன்னேற முடியாமல் திண்டாடிக்கொண்டிருந்த வேளையில் தான் 'ரணகோஷ' வவுனியா - மன்னார் வீதியால் மடுவை நோக்கி முன்னேறியது. மடுத் தேவாலயத்தில் படையினரின் எறிகணை வீச்சில் நாற்பதுக்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்ட நிலையில் போராளிகளுக்கு அங்கிருந்து பின்வாங்குவதைவிட வேறுவழியிருக்கவில்லை.

அந்த 'ரணகோஷ' எதிர்ச் சமரில் அந்த இலுப்பைக்கடவைக் காட்டில் தான் தணிகைச் செல்வியின் பெண்கள் படையணி படையினரை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்தது. ஆனால் பாலியாற்றினூடாக மிக இரகசியமாக முன்னேறிய இராணுவ அணியொன்று பெண் போராளிகளைப் பின்பக்கமாகச் சுற்றி வளைத்துக் கொண்டது.

நான்குபக்கமும் சுற்றிவளைக்கப்பட்டநிலையில் மகளிர் அணி மிகவும் நெருக்கடிக்குள் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. அந்தச் சண்டையில் தணிகைச் செல்வி உட்பட 22 பெண் போராளி கள் வீரச்சாவடைந்தனர். ரூபாவும் மேலும் பல போராளிகளும் படு காயங்களுக்கும் உள்ளாகினர். எனினும் முன்பக்கமாகக் காப்புச் சூடு நடத்தியவாறு பின் பக்கச் சுற்றிவளைப்பை மகளிர் அணி உடைத்து வெளியேறியது. அந்தச் சந்தர்ப்பத்தில் உதவிப் படையணியும் வந்து சேரவே இராணுவ அணிகள் நிர்மூலம் செய்யப்பட்டன. அந்தச் சண்டையுடன் படையினர் 'ரணகோஷவின்' முன்னேற்ற முயற்சியைக் கைவிட்டுப் பின்வாங்கிவிட்டமை தணிகைச் செல்வியின் அணியினரின் பெரும் சாதனையாகவே விளங்கியது.

ரூபாவுக்கு தணிகைச் செல்வியின் இழப்பு பெரும் மனக் கவலையை ஏற்படுத்திவிட்டது.

யாழ்ப்பாணம் படையினரின் இறுக்கமான கட்டுப்பாட்டில்

இருந்தபோது அவள் பல வெற்றிகரமான ஊடுருவல் தாக்குதல்களை நடத்தியிருந்தாள். பல்கலைக்கழக மாணவி போல், நவநாக ரிக மங்கை போல், ஒரு குடும்பப் பெண் போல் எனப் பல வடி வங்களிலும் ஆபத்தான இடங்களுக்குள் புகுந்து தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிவிடுவாள்.

அதே வேளையில் சண்டைகளின் போது போராளிகளை வழி நடத்துவதில் தனித்திறமை பெற்றிருந்தாள்.

முன் அணியில் தானே நின்று போரிட்டவாறே கட்டளை களை வழங்குவாள்.

ரூபா முகாமைவிட்டு வெளியேறிய போதே அவதானித்த சிறப்பு அணியைச் சேர்ந்த ஜான்சி, அவள் நீண்ட நேரம் திரும்பி வராத நிலையில் அவளைத் தேடிப்புறப்பட்டாள். அவள் ரூபாவை நெருங்கிய போது, ரூபா அவளைக் கவனிக்கவில்லை. அவளின் கண்களிலிருந்து நீர் பொல பொலவென வழிந்து கொண்டிருந்தது.

ஜான்சி மெதுவாக, "என்ன ரூபாக்கா! என்ன நடந்தது" எனக் கேட்டாள்.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த ரூபா, அவசரமாகக் கண் களைத் துடைத்தவாறே, "ஒண்டுமில்லை.. இந்தக் காட்டிலை தானே தணிகைச் செல்வி அக்காவைப் பலி குடுத்தம், அதை நினைச் சாப்போலை கவலையாயிருந்தது", என்றாள்.

ஜான்சி ஒரு பெருமூச்சுடன் சொன்னாள், "அக்கா, அவ என்னிலை எவ்வளவு அன்பு வைச்சிருந்தவ எண்டு தெரியும் தானே நான் ஒவ்வொரு முறையும் தாக்குதலுக்குப் போகேக்கை கண் கலங்க முத்தமிட்டு அனுப்புவா, ஆனால் நான் ஆறு முறை என்ரை இலக்கை நிறைவேற்றிப் போட்டு தப்பி வந்திட்டன்". "வீரச்சாவுக்காக என்னை வழியனுப்பிற அவவே, நாங்கள் வழியனுப்பாமல் வீரச்சாவடைஞ்சிட்டா.. போராட்டத்திலை இதெல்லாம் சகஜம், வாங்கோ.. போவமக்கா"

ரூபா, அவளின் முகத்தை உற்று நோக்கினாள். ஆறு முறை சாவடைந்தும் தன் முன் சிரித்துக் கொண்டு நிற்கும் ஜான்சியை பார்க்க அவளுக்குப் பெருமையாக இருந்தது. போராளிகள் சாதிக் கும் அற்புதங்களில் ஜான்சியும் ஒன்றாகவே ரூபாவுக்குத் தோன் றியது.

• • •

விடிந்து வெளிச்சம் பரவ ஆரம பித்த போது வெள்ளாங் குளத்தில் இருந்து மல்லாவி போகும் பாதையில் சுந்தரம் ஏறக்குறைய இரு மைல்கள் கடந்து விட்டான்.

அந்தப் பாதையில் விடியும் முன்பு போவது ஒரு பெரும் உயிராபத்தான பயணமாக முடிந்துவிடும். அது யானைகள் நடமாட்டம் மிகுந்த பகுதி. சில சமயங்களில் எருமைக் குழுவன் களும் அவ்வீதியைக் குறுக்கறுப்பதுண்டு.

சுந்தரம் சைக்கிளை வேகமாக மிதித்தான். சித்திரை வெயில் உச்சியைப் பிளக்கும் முன்பாக, எப்படியும் புத்துவெட்டுவானை அடைந்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், அவன் வேக மாகப் போய்க்கொண்டிருந்தான். புத்துவெட்டுவான் 'சவாரிச் செல்வராஜா' என்றால் அந்தப் பிரதேசத்தில் அவரை அறியாதவர்கள் எவரும் இருக்க முடியாது. அவர் நல்ல சுழி, சுட்டி உள்ள இளம் மாடுகளை விலை கொடுத்து வாங்கி சவாரி பழக்குவார். பின்பு மாட்டுவண்டில்சவாரிப் போட்டிகளில் பங்கு கொண்டு தானேமாடு கலைத்து எப்படியும் முதல் பரிசோ அல்லது இரண்டாம் பரிசோ பெற்றுவிடுவார். அந்தச் சூட்டுடன் அந்தச் சோடியை நல்ல விலைக்கு விற்றுவிட்டு, வேறு இரு புதிய மாடுகளை வாங்கிப் பழக்க ஆரம்பித்துவிடுவார்.

மன்னாரில் செல்வராசாவுக்கு நல்ல மாடுகளைப் பரமசிவம் தேடி வாங்கிக் கொடுப்பார். கடந்த தைப்பொங்கல் சமயத்தில் பரமசிவம் அவருக்கு ஒரு சோடி மாடு வாங்கிக்கொடுத்திருந்தார். அதில் செல்வராஜா இன்னும் ஓர் ஆயிரம் ரூபா பரமசிவத்துக்குக் கொடுக்கவேண்டியிருந்தது. செல்வராஜா கொடுக்கல்வாங்கல்களில் மிகவும் கண்ணியமானவர் என்றபடியால் அது பற்றி பரமசிவம் அக்கறைப்படவில்லை. இப்போ இடப்பெயர்வின் பின்பு காசுத் தேவைகள் ஏற்பட்டுவிட்டதால், சுந்தரத்தை செல்வராசாவிடம் காசு வாங்கிவர அனுப்பியிருந்தார்.

வரவரக் காட்டின் அடர்த்தி அதிகமாயிருந்தது. மேலும் சில மைல்கள் வந்த போது நடு வீதியில், 'யானை இலத்திகள்' அங்கு மிங்குமாகப் பல இடங்களில் கிடந்தன. அவற்றிலிருந்து மெல் லிய ஆவி வெளியேறிக் கொண்டிருந்ததைக் கண்ட போது சுந்தரத் துக்கு நெஞ்சு 'திக்' என்று அடித்துக் கொண்டது. எப்படியும் ஒரு அரை மணி நேரத்துக்கு உள்ளேயே யானைகள் வீதியைக் குறுக் கறுத்திருக்கவேண்டுமென ஊகித்துக் கொண்டான்.

வீதியின் இரு பக்கங்களையும் மிக உன்னிப்பாக அவதானித்த வாறு, பிரேக்கை விரலுக்குள் வைத்துக் கொண்டு சைக்கிளை வேகமாக மிதித்தான். அலியன் யானைகள் ஆளரவம் கண்டால் எவ்வித சத்தமுமில்லாமல் மறைவாக நின்றுவிடும். மனிதன் நெருங்கியதும் தும்பிக்கையால் சுருட்டித்தூக்கி காலுக்குள்போட்டுமிதித்துவிடும். ஆனால் மனிதன் யானையை முதலில் கண்டுவிட்டால் சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடினால் அது சைக்கிளை மிதித்து துவம்சம் செய்துவிட்டுப் போய்விடுமாம்.

கூட்டமாக வரும் யானைகளால் ஆபத்துக் குறைவான போதிலும் சில சமயங்களில் அவையும் மனிதரை அடித்துவிடலாம். எனவே சிவம் மிக மிக அவதானத்துடன் போய்க்கொண்டிருந்தான். கல்விளாங்குளம் சந்திக்கு வந்து சேர்ந்த போது நேரம் எட்டரையாகிவிட்டது. ஏதாவது ஒரு தேநீர் கடையை அவனின் கண்கள் தேடியபோதும் அங்கு அப்படி எதுவும்இருப்பதாகத்தெரிய வில்லை. அவன் பறங்கியாற்றுப் பாலத்தைத் தாண்டி துணுக்காயை நோக்கி சைக்கிளை வேகமாக மிதித்தான்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# அ.முத்துலிங்கத்தின் 'அம்மா' பாத்திரவார்ப்பு

■ சு.குணேஸ்வரன்



ஒரு படைப்பு பாத்திர வார்ப்பாலேயே சிறப்புப் பெறுகிறது. அது சிறுகதையாயினும் நாவலாயினும் அப்படைப்புக்கள் பற்றிப்பேசும் பொழுது அவற்றில் வந்த பாத்திரங்களே எப்போதும் நினைவில் நிற்பன. ஜெயகாந்தனின் சிலநேரங்களில் சிலமனிதர்களில் வரும் 'கங்கா'போல பாத்திரங்கள் முழுமையும் சிறப்பும் பெற்றிருக்கவேண்டும் என்று கருதப்படுகின்றது.

நாவலில் பாத்திரங்கள் முதன்மை இடத்தில் இருத்தல் வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்தாகும். மிகையுணர்ச்சி மற்றும் வீரம் சார்ந்த நாவல்களில் நிகழ்ச்சிகளுக்குச் சிறப்பிடம் தரப்பெறும். ஆனால் அண்மைக்காலத்தில் இம்மிகையுணர்ச்சி பெரிதும் போற்றப்படுவதில்லை. யதார்த்தமான சித்திரிப்பே வரவேற்கப்படுகிறது. இதனை ஒருநாவலில் பாத்திரங்கள் மூலமாகவே காட்டமுடியும்.

அ. முத்துலிங்கத்தின் 'உண்மை கலந்த நாட்குறிப்புகள்' என்னும் நாவலில் வரும் அம்மா, என்ற பாத்திரம் மனதில் நிலைத்து நிற்கும் வகையில் வார்க்கப்பட்டுள்ளது.

முத்துலிங்கம் தனக்கு நினைவு தெரிந்த மூன்று வயதில் இருந்து இந்தக்கதையைச் சொல்கிறார். தன்னைப் பற்றியும், தனது சகோதரர்கள் பற்றியும், பள்ளிப்பருவ நண்பர்கள் பற்றியும், இளம்பருவக் குறும்புகள் பற்றியும் எழுதிச்செல்கிறார். தன்னைச்சூழ இருந்த குடும்பஉறவுகளின் கதையை அடிமனத்தின் ஆழத்திலிருந்து கதைகதையாகச் சொல்லியபடியே செல்கிறார். குறிப்பாகத் தாய், தந்தை, அக்கா ஆகிய பாத்திரங்களின் வார்ப்பும் அவர்களைப் பற்றிய படிமமும் மனத்தைவிட்டு அகலாதவையாக உள்ளன.

முத்துலிங்கம் தனது தாயாரை 13 வயதில் இழந்துவிடுகிறார். அப்பருவம்வரை தன்நினைவில் நிறைந்திருக்கின்ற அம்மாவை அழகாகச் சித்திரித்துள்ளார். ஏற்கெனவே முத்துலிங்கத்தின் பலசிறுகதைகளில் அம்மா




பாத்திரம் அழகாக வார்க்கப்பட்டுள்ளது. அதனால் தாய்பற்றிய உணர்வு புனைவு முழுவதும் ஆங்காங்கே இழையோடுகிறது. இப்புனைவில் 'முதல்நினைவு', 'பேச்சுப்போட்டி', ஆகியதலைப்புக்களில் வருகின்ற அம்மா பற்றிய பதிவும் மறக்கமுடியாதது. ஒருமுறை நல்லூர் சப்பறத் திருவிழாவுக்கு அம்மா, ஐயா, சகோதரர்களுடன் சென்றபோது சனநெரிசலில் அகப்பட்டுத் தாயையும் சகோதரியையும் பிரிந்துவிடுகிறார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பின்வருமாறு எழுதுவார்.

"ஒருநீண்ட வாங்கில் நாங்கள் எல்லோரும் பொலீஸ் ஸ்டேசன் வாசலில் உட்கார்ந்திருந்தோம். அங்கு இருந்த பொலிஸ்காரர் களும், வந்துபோன சனங்களும் நாங்கள் தான் தொலைந்து போனவர்கள், யாருடைய வருகைக்கோ காத்திருக்கிறோம் என்பது போலப் புதினமாகப் பார்த்தார்கள். திடீரென்று அண்ணன் அழத்தொடங்கிய போது எனக்குப் பயம் பிடித்தது. அரைமணி நேரம்கழித்து அம்மா அரக்கப்பரக்க ஓடிவந்தார். எந்தப் பூகம்பம் வந்தாலும் அழாத தங்கச்சி அழுகை முடிந்து விம்மிக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் கண்ணீர் காய்ந்து காணப்பட்டது. அம்மா கவனமாக மடிப்புகள் வைத்து உடுத்திய சேலை தாறுமாறாகக் குழம்பிக்கிடந்தது. தலைமயிர்குலைந்து கண்ணீர் ஒழுகியது.

(18ஆம் பக்கம் பார்க்க)



விலகக் காத்திருக்கிறது
நேற்றையொத்த இன்னொருநாள்
விழுங்கிய அரைக்குவளை நீர்
இனிப் பீடிக்கவிருக்கும் இரவினை
ஈரப்படுத்தித் தணிக்க-
அடுக்கடுக்காய் துயிலலைகள்
ஊற்றெடுத்துப் பாய்கின்றது
இரண்டுமிலா தருணத்து
ஒருமையில் விழிக்க
மேனியெங்கும்
யாரோ உலவிய தடயங்கள்
குவிந்திருக்கும் இலைகளுக்குள்
இறகொன்று
பறத்தலின் வெளியை
இழந்து கிடக்கிறது
சுற்றிலும் பனியுறைவாய் மோனம்
நம்மிருவரின் தூரத்தை
நகர்த்த மறுக்கிறது
மடிக் கணினியின் திரைக்குள்
ஒற்றைச் சொடுக்கில்
மின்னல்வெட்டாகி மறையும்
பொய்த்தலின் நீங்கா வசீகரம்
பெருங்கருணையின் கரம்
தன் மறுகரத்தைத் தேடிப் பதிகிறது
என்னிலே.

- சு.சண்முகம்

## நூல் அறிமுகம் :
# ஆரையூர் கண்ணகை வரலாறும் வழிபாடும்

■ சி.விமலன்


சிந்துவெளி நாகரிக காலத்தில் இருந்தே தமிழர் மத்தியில் சக்தி வழிபாடு இருந்து வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக இன்று வரை சக்திவழிபாட்டில் பெண்தெய்வங்களை பராசக்தி, காளி, சரஸ்வதி, இலட்சுமி, துர்க்கை, கண்ணகையம்மன் எனப் பல்வேறு பெயர்களில் வழிபட்டு வருகின்றோம். இத்தெய்வவழிபாடு இந்தியாவில் மட்டுமல்லாமல் ஈழத்தி லும் பன்னெடுங்காலமாகவே இடம் பெற்றுவருகின்றது. கி.பி. இரண்டாம் நூற்றாண் டில் கஜபாகு மன்னனால் இலங்கைக்கு கொண்டுவரப் பட்ட கண்ணகி வழிபாடு சிங்கள மக்கள் மத்தியில் பத்தினி தெய்யோ என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

கண்ணகை அம்மன் ஆலயங்களில் பொங்கல் படைத்து குளிர்த்தி பாடி பல்வேறு சடங்குகளின் அடிப்படையில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. வட இலங்கையில் பல்வேறு ஊர்களில் கண்ணகை அம்மன் கோயில்கள் இருந்தாலும் ஆறுமுக நாவலர் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் வெவ்வேறு பெயர்களில் அவை மாற்றம் பெற்றிருந்தன. ஆனால் கிழக்கிலங்கையில் கண்ணகையம்மன் வழிபாடு பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவே விளங்குகின்றது. இன்றுவரை கிழக்கு மாகாணத்தில் அறுபதற்கும் மேற்பட்ட கண்ணகைஅம்மன் ஆலயங்கள் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது:




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

அந்தவகையில் ஆரையம்பதியில் அமைந்துள்ள கண்ணகி அம்மனின் சமய, சமூக வரலாற்றையும் வழிபாட்டையும் கூறுவதாக அமைந்துள்ளது 'ஆரையூர் கண்ணகை வரலாறும் வழிபாடும்'என்ற இந்தநூல்.




இரண்டு பிரிவுகளைக் கொண்ட இந்த நூலின் முதற்பிரிவு கண்ணகை வழிபாட்டின் அறிமுகம், தலவரலாறு, சடங்கு முறைமைகள் ஆலயத்தின் அமைப்பு மற்றும் அம்பாளின் அற்புதங்களை உள்ளடக்கியது. இரண்டாவது பிரிவில் ஆரையம்பதி அம்பாள் மீது பாடப்பட்ட காவியங்கள், கவசங்கள் மற்றும் பாடல்களை உள்ளடக்கியதாகத் தொகுக்கப்பட்டுள்ளது. கண்ணகி வழிபாடு பற்றிய ஆய்வுகள் தீவிரம் பெற்றுவரும் இன்றைய சூழலில் அதன் தொடர்ச்சியாக இந்தநூல் அமைகின்றது.

கிழக்கிலங்கையின் 16 ஊர்கள் சார்ந்த 'ஊர் சுற்றுக்காவியம்' யாரால் எப்போது பாடப்பட் டது என்ற விபரம் சரியாகத் தெரிய வராத போதிலும் அக்காவியத்தின் 3 ஆம்பாடலில்

'நன்நில மதிகக்கவரு காத்தநகர் தன்னில்வாழ் நளினமல ரணைப்பத நடனசுந் தரியே'

(18ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கப்பூர் குடிசைகள் எப்படி அடுக்குமாடி வீடுகள் ஆயின?

பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 30

## ‘வீழ்வேன் என்று நினைத்தாயோ?’ மாலனின் புத்தகத்திலிருந்து

சிங்கப்பூரை லீ குவான் யூ கட்டியமைத்த கதையை 128 பக்கங்களில் ‘வீழ்வேன் என்று நினைத்தாயோ?’ என்ற நூலில் சுருக்கமாக எழுதியிருக்கிறார் மூத்தப் பத்திரிகையாளரான மாலன். குடிசைகளில் இருந்த பெரும்பான்மை சிங்கப்பூர்வாசிகளுக்கு அடுக்குமாடி வீடுகள் எப்படி சொந்தமாயின எனும் அத்தியாயத்திலிருந்து ஒரு பகுதி இது.



“லீ குவான் யூவின் கனவுதான் என்ன?

ஒரு தேசம் உறுதியாக நிற்க வேண்டுமானால் அதில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் உறுதியாக நிற்கும் வலிமை கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் உறுதியாக இருக்க வேண்டுமானால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் சொந்தமாக வீடு இருக்க வேண்டும். இது லீயின் சிந்தனைகளில் ஒன்று. சிந்தனை சரிதான். ஆனால் நடைமுறையில் சாத்தியமா?

நடைமுறை சாத்தியமில்லை என்றுதான் மற்ற நாடுகள் நினைத்திருக்கும். ஆனால், ஏன் சாத்தியமாக்கக் கூடாது என்று லீ நினைத்தார். சிங்கப்பூரின் வெற்றி மந்திரங்களில் ஒன்று இந்த ‘ஏன் கூடாது?’ ஏன் என்ற கேள்வி சில நேரங்களில் சோர்வளிக்கும். சில நேரங்களில் ‘ஏன் கூடாது’ என்ற கேள்வி ஊக்கமளிக்கும் என்பது உளவியல்.

ஒவ்வொரு நாடும் வீட்டுப் பிரச்சினையை ஒவ்வொரு விதத்தில் அணுகிவந்திருக்கின்றன. சோஷலிச நாடுகள், நாடு ஒட்டுமொத்தமாகப் பொருளாதார வளர்ச்சி காணும்போது வீட்டுப் பிரச்சினை தானாகத் தீரும் எனக் கருதின. முதலாண்மை நாடுகள் தனிமனிதனின் பொருளாதாரம் மேம்படும்போது அவரவர்களே வீட்டுப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வார்கள் என்று கருதின. நடைமுறைவாதியான லீ, வீடுகளைக் கட்டுவது மூலம் நாட்டைக் கட்ட முடியும் என நம்பினார். அரசியலுக்கு வருவதற்கு முன்பிருந்தே அவரது சிந்தனை ‘வீட்டுடமைச் சமூகம்தான்’.

குடியரசாக மலர்வதற்கு முன்பு, சுய ஆட்சி அரசு (பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாட்டின்கீழ், குடிமைப் பணிகளை நிறைவேற்றிக்கொள்ளும் அதிகாரம் கொண்ட, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு) உருவான காலத்திலேயே அதற்கான வேலைகளைத் தொடங்கினார் லீ. சுய ஆட்சி அரசுக்கான 1959-இல் நடந்த தேர்தலில் லீயின் கட்சி பிரம்மாண்ட வெற்றி பெற்றிருந்தது (மொத்தமுள்ள 51 இடங்களில் 43 இடங்கள்) லீ பிரதமானார். அப்போது, 1960இல் அவரது அரசு வீட்டு வசதிக் கழகத்தை (வீ.வ.க.) உருவாக்கியது தெளிவான இலக்கு, எளிதான நடைமுறை என்ற இரு அம்சங்கள் அதன் ஆணி வேர்.

ஆண்டுக்கு 10 ஆயிரம் வீடுகள் என்ற அடிப்படையில் 10 ஆண்டுகளில் லட்சம் வீடுகளை அரசு கட்டும். அவை தவிர ஆண்டுக்கு 2,500 வீடுகள் கட்டும் பொறுப்பு தனியார் துறைக்கு வழங்கப்படும். இது இலக்கு. வீடு கட்டுவதற்கான நிலத்தைக் கையகப்படுத்துவது, அனுமதி அளிப்பது, கட்டப்பட்ட வீடுகளை ஒதுக்கீடு செய்வது என அமைக்கப்பட்ட 35 கமிட்டிகளைக் கலைத்துவிட்டு ஒரே அமைப்பின்கீழ் அவற்றைக் கையாள்வது. இது எளிமைப்படுத்தப்பட்ட நடைமுறை.

திட்டம் காகிதத்தில் பிரமாதமாகத்தான் இருக்கிறது. ஆனால், ஆண்டுக்குப் பத்தாயிரம் வீதம் பத்தாண்டில் லட்சம் வீடுகள் கட்டுவது என்றால் நிலத்திற்கு எங்கே போவது? ‘டைமண்ட்’ வடிவத்தில் உள்ள சிங்கப்பூரில் மிக விலகிய இரு இடங்களுக்கிடையே தூரம் 52 கி.மீ.தான். நிலமில்லாவிட்டால் என்ன? வானம் இருக்கிறதே! அகலமாக வளர்வதற்குப் பதிலாக உயரமாக வளரலாம் என முடிவெடுக்கப்பட்டது. 12 மாடி, 16 மாடி என அடுக்குமாடி வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டது.



பிரமிக்கத்தக்க விதத்தில் வீ.வ.க. செயல்பட்டது. உருவாக்கப்பட்ட இரண்டாண்டுகளில் 26,168 வீடுகளை அது கட்டி முடித்தது. வீ.வ.க. உருவாவதற்கு முன் வீடுகள் கட்ட ‘சிங்கப்பூர் வளர்ச்சி அறக்கட்டளை’ (சி.வ.அ.) என்ற அரசு ஆதரவு பெற்ற நிறுவனம் ஒன்றிருந்தது. 32 ஆண்டுகளில் சி.வ.அ. கட்டிய வீடுகளின் எண்ணிக்கையை வீ.வ.க. இரண்டாண்டுகளில் கட்டி முடித்தது! ஐந்தாண்டுகளில், அதாவது சிங்கப்பூர் குடியரசாக மலர்ந்தது. 1965இல், அதன் இலக்கான 50 ஆயிரம் வீடுகள் என்பதைத் தாண்டி, 53 ஆயிரம் வீடுகளைக் கட்டி முடித்திருந்தது. 1965 உலக அளவில், சோவியத் யூனியன், ஜெர்மனிக்கு அடுத்தபடியாக வீட்டு வசதி விஷயத்தில் முன்னணியில் நின்றது சிங்கப்பூர். அமெரிக்காவைவிடவும் மேலான நிலையில். பிரான்ஸ், நெதர்லாந்து, மற்ற ஐரோப்பிய நாடுகளைவிடவும் சிறப்பான நிலையில் அது இருந்தது.

அரசு கை பணத்தைப் போட்டோ, கடன் வாங்கியோ, மூலதனம் திரட்டியோ ஆயிரக் கணக்கில் வீடுகளைக் கட்டிவிடலாம். ஆனால், அவற்றை இலவசமாகக் கொடுக்க முடியாது. அப்படிக் கொடுத்தால் மக்களுக்கு அதன் அருமை புரியாது என்பது மட்டுமல்ல, தொடர்ந்து அரசால் வீடுகள் கட்ட முடியாது. பொருளாதாரம் முடங்கி ஒரு இடத்தில் மொத்த திட்டமும் தடைபட்டு முடங்கி நிற்கும். ஆண்டுக்குப் பத்தாயிரம் வீடுகள் என்ற இலக்கை அடைய முடியாது. இதற்குத் தீர்வு, கட்டப்பட்ட வீடுகளை விற்பதுதான். விற்கலாம்தான். ஆனால் யார் வாங்குவார்கள்? குடிசைகளில் வாழுகிற மக்களிடம் வாங்கும் சக்தியிருக்குமா?

அங்குதான் ஒரு புரட்சிகரமான அணுகுமுறையை அரசு மேற்கொண்டது. அதுதான் மற்ற பல நாடுகளில் வெற்றி காணாத வீட்டு வசதித் திட்டம், சிங்கப்பூரில் வெற்றி கண்டதற்குக் காரணம். அது வீடுகளுக்குக் குடிபெயர்வோர், வீட்டின் விலையில் 20% முதல் தவணையாகக் கொடுக்க வேண்டும். மீதமுள்ள தொகையை வீ.வ.க. மிகக் குறைந்த வட்டியில் கடனாகக் கொடுக்கும். அந்தக் கடனுக்கு மாதா மாதம் தவணை கட்டி வர வேண்டும், வாடகை செலுத்துவதைப் போல.

சரி கையில் ரொக்கம் இருந்தால்தானே கொடுக்க முடியும்? கையிலிருந்து கொடுக்க வேண்டாம். சேமிப்பாக இருக்கும் வருங்கால வைப்புத் தொகையிலிருந்து அந்த 20 சதவீதத்தை எடுத்துக்கொள்ளச் சொல்லலாம். மாதத்தவணையைக்கூட அதில் பிடித்துக்கொள்ளச் சொல்லலாம். இதற்கு வகை செய்யும் விதமாக பிராவிடண்ட் பண்ட் சட்டம் 1968இல் திருத்தப்பட்டது. விளைவு, 1970இல் நாற்பதாயிரம் குடும்பங்கள் சொந்த வீடு வாங்கியிருந்தன!”



'பிக் பாஸ்' முதல் சீசனில் அப்பா ஸ்தானத்தில் இருந்து தன் திருமணத்தை நடத்திவைக்க வேண்டும் என்று நடிகை சுஜா வருணி, கமலிடம் கேட்டதற்கு அவரும் ஓகே சொன்னார். வரும் நவம்பர் 19 ஆம் திகதி நடக்கவிருக்கும் தன் திருமணத்தின் முதல் அழைப்பிதழை கமலிடம் கொடுத்துள்ளார் சுஜா.



விளையாட்டு வீராங்கனையும் நடிகையுமான பிராச்சி டெஹ்லான், ரகுல் ப்ரீத் சிங்கின் சகோதரரான அமன் ப்ரீத் சிங் ஜோடியாகப் புதிய படத்தில் நடித்துவருகிறார். படப்பிடிப்பு திருப்பதி வனத்தில் நடக்கிறது.



கதாநாயகன் இல்லாத படத்தில் நடிக்கிறார் ராய் லக்ஷ்மி. 'சின்ட்ரல்லா' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தில் இரு வேடங்களில் நடிக்கிறார் அவர்.

இதில் ஒன்று பேய் வேடமாமம். இதற்காக 4 மணித்தியாலம் மேக்கப் போடுகிறாராம் அவர்.






# சிலையமைப்பு

உதைபந்தாட்ட உலகின் ஜாம்பவானான ஆர்ஜென்ரீனாவின் டியாகோ மரடோனாவின் 58 ஆவது பிறந்ததினம் கடந்தமாதம் 30 ஆம் திகதி ஆர்ஜென்ரீனாவில் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு புவனர்ஸ்அயர்ஸ் நகரத்தில் உள்ள ஆர்ஜென்ரீனோஸ் ஜூனியர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு அருகில் அவரது சிலை புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது. இந்தக் கழகத்திலேயே மரடோனா தனது உதைபந்தாட்ட வாழ்க்கையை 1976 ஆம் ஆண்டு ஆரம்பித்திருந்தார். மரடோனாவுக்கு இந்தியா உட்பட வேறுசில நாடுகளில் சிலைகள் அமைக்கப்பட்டிருந்தாலும் ஆர்ஜென்ரீனாவில் மரடோனாவுக்கு சிலை அமைக்கப்படுவது இதுவே முதல்முறையாகும். வெண்கலத்தால் உருவாக்கப்பட்ட இந்தச்சிலை 2.8 மீற்றர் உயரம் கொண்டது.

பிறந்தநாள் அன்று கடும்மழை பெய்ததால் சிலை திறப்பு விழா பிற்போடப்பட்டு மறுநாளே நடைபெற்றது. ஆனாலும் மரடோனா தற்போது மெக்சிக்கோவின் டொறாடஸ் டி சினாலோவா அணிக்குப் பயிற்சியாளராக விளங்கி வருவதனால் இந்தச் சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்ளவில்லை. இது குறித்து இந்தச்சிலையை வடித்த சிற்பியான ஜோர்ஜ் மார்டினெஸ் 'வீரர்கள் வாழும்பொழுதே கௌரவிக்கப்படவேண்டும். அந்தவகையில் ஆர்ஜென்ரீன உதைபந்தாட்ட வரலாற்றில் இதுவொரு மைல்கல்' எனக்குறிப்பிட்டுள்ளார். சாதனையாளர்களைக் கௌரவிப்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்றாலும் மரடோனாவுக்கு வழங்கப்பட்ட இந்தக் கௌரவம் காலங்கடந்ததென்றே தோன்றுகிறது.

# நூல் வெளியீடு




2001 ஆம் ஆண்டு கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டி கிரிக்கெட் ரசிகர்களின் நினைவை விட்டு அகலாத ஒரு போட்டி. தொடர்ச்சியாக 16 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றிருந்த அவுஸ்ரேலியாவின் சாதனைப் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த போட்டி அது.

இந்தியா 171 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இந்தப்போட்டியில் முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 445 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்க இந்தியா 171 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து பலோனுக்குத் தள்ளப்பட்டது. தொடர்ந்து இரண்டாவது இனிங்சை ஆடிய இந்தியா 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறினாலும் வி.வி.எஸ்.லக்ஸ்மனும் ராகுல் டிராவிட்டும் இணைப்பாட்டமாக 376 ஓட்டங்களை 5 ஆவது விக்கெட்டுக்காகக் குவித்திருந்தார்கள். இந்தப் போட்டியில் லக்ஸ்மன் 281 ஓட்டங்களையும் டிராவிட் 180 ஓட்டங்களையும் பெற்றிருந்தார்கள். லக்ஸ்மன் பெற்ற 281 ஓட்டங்களே அன்றைய காலப்பகுதியில் இந்திய வீரர் ஒருவர் பெற்ற அதிகூடிய தனிநபர் ஓட்ட சாதனையாக விளங்கியது. அந்த வகையில் லக்ஸ்மனின் இந்த ஆட்டம் ஒன்றே போதும் கிரிக்கெட்டில் அவர் புகழ் நிலைத்து நிற்பதற்கு.

இதை ஏன் தற்போது நினைவுபடுத்துகிறேன் என்றால் கடந்தவாரம் லக்ஸ்மன் இந்தமாதம் 20 ஆம் திகதி வெளிவரவுள்ள தனது சுயசரிதை நூலின் அட்டைப்படத்தை ருவிற்றர் வலைத்தளத்தில் வெளியிட்டிருந்தார். தனது கிரிக்கெட் வாழ்வில் மிகச்சிறந்த இனிங்ஸ் ஆகக் கருதப்படும் 281 ஓட்டங்களை நினைவுகூரும் விதமாக நூலுக்கு '281 and Beyond' என்று தலைப்புச் சூட்டியதாலேயே. 134 டெஸ்ட் போட்டி களில் விளையாடி 17 சதங்கள் அடங்கலாக 8781 ஓட்டங்களைப் பெற்ற லக்ஸ்மன் 2012 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து தனது ஓய்வை அறிவித்திருந்தார். தற்போது தொலைக்காட்சி வர்ணனையாளராகவும் ஐ.பி.எல். தொடரில் சண்றைசர்ஸ் அணி யின் ஆலோசகராகவும் லக்ஸ்மன் விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் முதலிடம்




ஆண்களுக்கான ரென்னிஸ் தரவரிசையில் சேர்பியாவின் நோவாக் ஜோகோவிச் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். கடந்தவாரம் நடைபெற்று முடிந்த பாரிஸ் மாஸ்ரர்ஸ் தொடர் தொடங்குவதற்கு முன்னதாக முதலிடத்தில் இருந்த நடாலுக்கும் ஜோகோவிச்சுக்கும் இடையில் 215 புள்ளிகளே வித்தியாசம் இருந்தது. துரதிஸ்டவசமாக நடாலுக்கு ஏற்பட்ட காயமும் இந்தத் தொடரில் ஜோகோவிச் இறுதிப்போட்டி வரை முன்னேறியதும் முதலிடத்திற்கு அவரைக் கொண்டு வந்துள்ளது. 14 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற ஜோகோவிச் இதற்கு முன்னதாக 2011 ஜூலை மாதம் தொடக்கம் 223 வாரங்கள் முதலிடத்தைத் தக்கவைத்திருந்தார்.

கடந்தவருட நடுப்பகுதியில் இருந்து இறுதிவரை காயம் காரணமாக சில தொடர்களில் விளையாடாமல் இருந்த ஜோகோவிச் இந்தவருடம் நடைபெற்ற விம்பிள்டன் தொடர் ஆரம்பிக்கும் பொழுது தரவரிசையில் 21 ஆம் இடத்திலேயே இருந்தார். ஆனாலும் விம்பிள்டன், அமெரிக்க ஓப்பன் மற்றும் ஷாங்காய் மாஸ்ரர்ஸ் தொடர்களில் சம்பியன் பட்டம் வென்று 4 மாதங்களிலேயே முதலிடத்தைக் கைப்பற்றியுள்ளார். அந்தவகையில் 1973ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஏ.ரி.பி தரவரிசைப்படுத்தலின் பிரகாரம் 20 ஆம் இடத்திற்கு வெளியே உள்ள வீரர் ஒருவர் ஒருவருட காலத்தினுள் முதலிடம் பிடித்தது இதுவே முதல்தடவையாகும்.

புதிய பயிற்றுவிப்பாளராக மரியன் வஜ்டாவை நியமித்ததன் பிற்பாடு ஜோகோவிச்சின் வெற்றிப்பயணம் ஏறுமுகத்தில் சென்று கொண்டிருந்தாலும் முதலிடம் பிடித்த பாரிஸ் மாஸ்ரர்ஸ் தொடரிலேயே ரஸ்யாவின் கரென் கச்சனோவிடம் இறுதிப்போட்டியில் அவர் தோல்வியடைந்தது ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

# தொடர் வெற்றி




கடந்தவாரம் பிரான்சில் நடைபெற்ற லீக் 1 உதைபந்தாட்டத் தொடரின் பி.எஸ்.ஜி - லிலே அணிகளுக்கிடையிலான போட்டியில் 2 : 1 என்ற ரீதியில் பி.எஸ்.ஜி அணி வெற்றி பெற்றது. பி.எஸ்.ஜி அணி சார்பில் நெய்மரும் மாப்பேயும் இந்தக் கோல்களை அடித்திருந்தார்கள்.

இந்த வெற்றி இந்தப்பருவகாலத்தில் பி.எஸ்.ஜி அணி பெறுகின்ற தொடர்ச்சியான 12 ஆவது வெற்றியாக விளங்குவதனால் 57 வருட காலசாதனை ஒன்றை இதன் மூலம் அவ்வணி முறியடித்துள்ளது. ஐரோப்பாவில் நடைபெறுகின்ற கழகங்களுக்கிடையிலான லீக் சுற்றுப்போட்டிகளில் முதன்மையான 5 தொடர்களாக இங்கிலாந்தின் பிறீமியர் லீக் தொடர், ஸ்பெயினின் லாலிகா தொடர், இத்தாலியின் சீரிஏ தொடர், பிரான்ஸின் லீக் 1 தொடர், ஜேர்மனியின் புண்டலிஸ்கா தொடர் ஆகியவையே விளங்குகின்றன.

இந்த 5 லீக் தொடர்களிலும் இதுவரை ஒரு அணி அதிக பட்சமாக 11 வெற்றிகளைத் தொடர்ச்சியாகப் பெற்றதே சாதனையாக இருந்தது. அந்தவகையில் இந்தச் சாதனையை 1960 / 61 காலப்பகுதியில் நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் ரொற்றின்காம் அணி நிகழ்த்தி இருந்தது. இதனையே பி.எஸ்.ஜி அணி தற்போது முறியடித்துள்ளது. நடப்புச் சம்பியனாக விளங்கும் பி.எஸ்.ஜி அணி இந்த வெற்றி மூலம் லீக் 1 தொடரின் புள்ளிப்பட்டியலில் 36 புள்ளிகளைப் பெற்றுத் தொடர்ந்தும் முன்னிலை வகிப்பதனால் இந்தத் தொடர் வெற்றியின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 10.11.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.